பக்கங்கள்: 12+18= முப்பது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (24-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:330

## 'கராத்தே தந்தை' பொனி றொபேட்ஸ் தேசியத் தலைவரால் கௌரவிப்பு



கிளிநொச்சி,ஒக்.24

இலங்கையின் கராத்தே தந்தையும், எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவருமான கிராண்ட் மாஸ்ரர் சீகான் பொனி றொபேட்ஸ் (Grand Master Shihan Bonnie Roberts) கராத்தே கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தேசிய விருதினையும் நினைவுப் பரிசினையும் வழங்கிக் கௌரவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை தாக்குதல்களைக் கண்டித்து நாளை ஊர்வலமும், மறியல் போராட்டமும்

யாழ்ப்பாணம்,ஒக்.24

பருத்தித்துறை முனைப் பகுதியில் பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் இவ்வாறான அடாவடித்தனங்கள் தொடராமல் இருப்பதை உறுதிப்படுத்தக் கோரியும் பருத்தித்துறையில் நாளை சனிக்கிழமை ஊர்வலம் மற்றும் மறியல் போன்ற அடையாள எதிர்ப்புப் போராட்டங்கள இடம்பெறவுள்ளன.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டங்களில் குடாநாட்டிலுள்ள அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களும் மற்றும் பொது அமைப்புக்களும் இணைந்து கொள்ளவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை முனைக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை, மீனவ இளைஞன் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட மக்கள் மீது படையினர் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர் அத்துடன் பொதுமக்களின் சொத்துக்கள் பலவும் சேதமாக்கப்பட்டிருந்தன. இச்சம்பவங்களைக் கண்டித்தே வடமராட்சி மீனவர் சங்கங்கள் ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

நாளை காலை 8 மணிக்கு பருத்தித்துறை முனைக் கடற்கரையில் ஒன்றுகூடும் மீனவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலக முன்றிலைச் சென் (12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவரை பதவிநீக்க ஜனாதிபதி கோரிக்கை

### நோர்வே பிரதமரிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஒக்.24

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரான மேஜர் ஜெனரல் ரெலிவ்ஸனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நோர்வே பிரதமரைக் கோரியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இலங்கையின் பாதுகாப்பைப் பொறுத்தவரை இதுவரை ரெலிவ்ஸனின் நடவடிக்கைகள் திருப்திகரமானவையாக அமையவில்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி குமாரதுங்க யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு நிலைமையுடனும் உண்மை (12ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்களுக்கு.....!

இன்றைய 'உதயன்' மொத்தம் முப்பது பக்கங்களுடன் வெளிவருகின்றது. வழமையான செய்திகள், நாளாந்த விடயதானங்கள் பன்னிரெண்டு பக்கங்களில் தனியாகவும் -

கண்கவர் வர்ணப் பக்கங்களுடன் கூடிய தீபாவளி சிறப்பு மலர் பதினெட்டு பக்கங்களில் தனி இணைப்பாகவும் வெளியாகின்றன.

உதயனுடன் தீபாவளிச் சிறப்பு மலர் இணைப்பையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### இடைக்கால நிர்வாகம் தொடர்பான

# விடுதலைப் புலிகளின் ஆலோசனைகள்

# அடுத்த ஆண்டில்தான் ஆராயப்படும்!

## முஸ்லிம்களின் பங்குபற்றல் பற்றி தீர்மானிக்க நவம்பரில் பேச்சு என்கிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு,ஒக்ரோபர்24

**இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் ஆலோசனைகள் எதிர்வரும் 31ஆம் திகதி அரசுக்குக் கிடைக்கும் என்றாலும் அந்த ஆலோசனைகள் பற்றி அடுத்த வருடமே ஆராயப்படும். எனினும், அடுத்த மாதம் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது புலிகளுக்கும் அரசுக்குமிடையே பூர்வாங்கப் பேச்சு நடக்கும். புலிகளின் ஆலோசனைகளை எங்கே, எந்தத் திகதிகளில் ஆராய்வது என்பது பற்றியும் அதில் முஸ்லிம் தரப்பும் பங்குபற்றுவதா என்பது குறித்தும் பூர்வாங்கப் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்படும்.**

**அமைச்சரவைப் பேச்சாளரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தத் தகவல்களை நேற்றுத் தெரிவித்தார்.**

தேசியப் பாதுகாப்புக் கருதியே இலங்கை, இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளவிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதங்களைத் தூக்கிவிடுவார்கள் என்றோ, அவர்களால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்றோ அச்சத்தால் அல்ல எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இடைவெளி பெரிதும் சுருங்கிவிட்டது. அதேபோன்று இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான நல்லெண்ணமும் பாரம்பரிய உறவுகளும் பெரிதும் நெருக்கம் அடைந்துள்ளன.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான தமது வரைவை இம்மாதம் 31ஆம் திகதி முன்வைக்கவுள்ளனர். நோர்வே தூது (12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பில் சு.க. மக்கள் பேரணி

கொழும்பு,ஒக்.24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருக்கும் அரசு எதிர்ப்பு மக்கள் பேரணி இன்று பிற்பகல் கொழும்பில் நடைபெறும்.

கொழும்பின் ஐந்து இடங்களிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலங்கள் மாநகரசபைத் திடலைச் சென்றடைந்ததும் பிற்பகல் 4 மணியளவில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். (எ)

### ஹர்த்தாலை அடுத்து

## கிண்ணியாவில் நேற்று பதற்றம்; ஊரடங்குச்சட்டம் பிறப்பிப்பு!

திருகோணமலை,ஒக்.24

கிண்ணியாவில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலை அடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது. இதன் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் ஊரடங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

கிண்ணியா முஸ்லிம்களின் வண்டில் மாடுகள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதைக் கண்டித்து இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாக முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஹர்த்தாலை அடுத்து அலுவலகங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் உட்பட ஏனைய ஸ்தாபனங்களும் இயங்கவில்லை.

கிண்ணியா - திருமலை படகுச் சேவையும் நிறுத்தப்பட்டதால்- திருமலை நகருக்குத் தொழில்புரிய வரு (12ஆம் பக்கம் பார்க்க)

## புத்திரசிகாமணி எம்.பி. நேற்று அரசாங்கத்துடன் சேர்ந்தார்!

கொழும்பு,ஒக்.24


பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பியான வி.புத்திரசிகாமணி நேற்று மேற்படி கட்சியிலிருந்து விலகி அரசாங்கக் கட்சி ஆதரவாளராக மாறி நாடாளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் வரிசையில் அமர்ந்து கொண்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)




## உலகமக்கள் அனைவருக்கும் சுபீட்ச வாழ்வு கிடைக்கட்டும்!

### தீபாவளிச் செய்தியில் இந்துமத குருபீடாதிபதி



இன, மத, மொழி கடந்து உலக வாழ்மக்கள் அனைவருக்கும் சுபிட்சமும், ஐஸ்வர்யங்களும், சந்தோசமுமான பெருவாழ்வு கிடைக்க வேண்டும்.

சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தீபங்களின் வரிசையாம் - தீபாவளி என்னும் இந்துக்களின் பண்டிகைத் திருநாளான இந்தப் பெருநாளில் அனைத்து மக்களுக்கும் பத்திரிகையின் ஊடாக ஆசிச்செய்தி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அதர்மம் அழிந்து தர்மமே தலைதூக்கும் என்னும் அறக்கருத்தை வலியுறுத்தி, தீபத்தின் பிரகாசம் போன்று வாழ்வின் உன்னத நிலையும் பிரகாசிக்க வேண்டுமென ஜோதிவடிவமாக விளங்கும் இறைவனை வேண்டி, இன, மத, மொழி கடந்து, உலக வாழ் மக்கள் அனைவருக்கும் சுபீட்சமும், ஐஸ்வர்யங்களும், சந்தோஷமும், ஆனந்தப் பெருவாழ்வும் கிடைக்கவேண்டுமென மனம் நிறைந்த மகிழ்ச்சி பொங்கும் ஆசிகள் பல கூறி அமைகின்றேன் என்றுள்ளது. (எ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய அதிகாரி நியமனத்தில் வடக்கு - கிழக்கு புறக்கணிப்பு

## தமிழீழ சுகாதார சேவை குற்றம் சுமத்துகின்றது

கிளிநொச்சி,ஒக்.24

புதிய வைத்திய அதிகாரிகள் நியமனத்தில் தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு - கிழக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று தமிழீழ சுகாதார சேவையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது விடயமாக அந்த அமைப்பின் பணிப்பாளர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சுகாதார அமைச்சின் 06.10.2003 திகதியிடப்பட்ட அறிவிப்பின்படி, 140 புதிய வைத்திய அதிகாரிகளை வெற்றிடங்கள் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்க ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நியமன விவரத்தில் தமிழ் வைத்தியர்களும் உள்ளனர்.

ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள அனேகமான வைத்தியசாலைகளில் உண்மையில் வைத்தியர்களுக்கு மிகவும் பற்றாக்குறை இருப்பதைத் தெரிந்திருந்தும், புதிய வைத்திய நியமனங்கள் வழங்கும் விடயத்தில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்கள் சரியாக குறிப்பிடப்படாது, திட்டமிட்டு புறக்கணிப்புச் செய்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடக்கு - கிழக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 80 வீதத்திற்கும் அதிகமாகவும், மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் 65 வீதத்திற்கு அதிகமாகவும், வவுனியா மாவட்டத்தில் 40 வீதத்திற்கு அதிகமாகவும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை இருக்கின்றன.

ஆனால், இப்படியான நிலைமைகளை அறிந்திருந்தும், கண்டிருந்தும் புறக்கணித்து வெற்றிடங்கள் அறிவித்துள்ள விவரத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஆதார வைத்தியசாலையின் கல்முனையில் ஒரு வெற்றிடமும், அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் 2 வெற்றிடங்களும், மன்னார் ஆதார வைத்தியசாலையில் 7 வெற்றிடங்களும், சுற்றியல்கூறு, புல்மோட்டை சுற்றியல்கூறு ஆஸ்பத்திரியில் 1 வெற்றிடமும் உள்ளதாக விளம்பரப்படுத்தியுள்ளது சுகாதார அமைச்சு.

எனவே, வைத்திய அதிகாரிகள் உண்மையில் இல்லாத தமிழர் பகுதிகளில் வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதை விளம்பரப்படுத்தப்படாததால், தமிழ் வைத்திய அதிகாரிகள் இங்கு வந்து சேவையாற்ற விருப்பம் இருந்தும் விண்ணப்பிக்க முடியாத நிலையை இலங்கை அரசின் சுகாதார அமைச்சு செய்திருக்கின்றது.

இது சமாதான சூழல் நிலவுகின்ற இவ்வேளையில் தமிழ் மக்களுக்கும், புதிதாக உருவாகின்ற வைத்திய அதிகாரிகளுக்கும், இப்பகுதிகளில் நீண்டகாலமாக பெரும் சிரமத்தை அனுபவித்து தொடர்ந்தும் பணியாற்றுகின்ற வைத்தியர்களுக்கும் மிகுந்த மன வேதனையையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது. இதற்குமுன் நியமனங்கள் வழங்கிய போதும் இதே நிலைதான் இருந்தது, அதையும் தெரியப்படுத்தியிருந்தோம்.

எனவே, இப்படியான நியமனங்கள் வழங்கும் வேளை மனிதாபிமானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும் -என்றுள்ளது. (எ-3)

# சமாதானத் தீபவொளி நாடெங்கும் பிரகாசிப்பு

## குருமார் ஒன்றியம் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம்,ஒக்.24

யுத்தம் என்ற இருளகன்று சமாதானத் தீபவொளி நாடெங்கும் இன்று சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது.

- இவ்வாறு தீபாவளி தினச் செய்தியில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்தச் செய்தி வருமாறு:-

தீபாவளி தினத்திலே இந்து மக்கள் அனைவரும் நீராடிப் புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவனை திரிகரணசுத்தியுடன் பிரார்த்தித்து இல்லங்கள் தோறும் தீபங்கள் ஏற்றி வசதி வாய்ப்புக்கள் குறைந்த மக்களுக்கு உணவு, உடை என்பன அளித்து இன்புற்று மகிழ்வோமாக.

இந்த சமாதான ஒளியானது எங்கணும் வியாபித்து என்றும் நிலைத்து நல்லொளி பரப்பி அனைத்து மக்களும் சிறப்புற்று வாழ இறைவனை மனதார வேண்டி இந்துமத குருமார்கள் சார்பில் தீபாவளி வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் கூறிக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ)

# மனித குலத்தின் விடுதலையைக் குறிக்கும் தீபாவளி புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும்!

## தீபாவளிச் செய்தியில் பிரதமர் நம்பிக்கை

கொழும்பு,ஒக்.24

அடக்குமுறையிலிருந்து மனித குலம் விடுவிக்கப்படுவதை குறிப்பிடும் தீபாவளித் திருநாள் புரிந்துணர்வுக்கு வழிவகுக்கட்டும்.

- இவ்வாறு தனது தீபாவளி தினச் செய்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

இருளில் இருந்து மீண்டும் ஒளியைப் பெறுவதை தீபாவளி தினம் தெரிவிக்கின்றது. அடிமைத்தனம், அடக்குமுறைகளிலிருந்தும் மனித குலம் விடுவிக்கப்படுவதை இத்தினம் குறிப்பிடுகின்றது. அத்துடன் ஆன்மா இருளிலிருந்து விடுதலை பெறுவதையும் துன்பம் மற்றும் வேதனையிலிருந்து விடுதலை பெறுவதையும் இந்நாள் சுட்டுகிறது.

ரிக் வேதம் சான்று பகர்வது போல் தீபாவளியானது சமாதானம், விடுதலை மற்றும் ஒற்றுமையின் பெருநாளாகும். இந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முன்னெடுப்புக்கள் எமது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல முட்டுக்கட்டைகளை தாண்டவேண்டி இருப்பினும், சுமுக நிலையை ஏற்படுத்துவதற்காக நாங்கள் வேகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நாட்டு மக்கள் குறிப்பாக இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் இந்த நிலையை எட்டுவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குவதன் மூலம் உதவியுள்ளனர். இந்த விழிப்புணர்வானது தேசிய ஒருங்கிணைப்பு, ஒற்றுமை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுக்கு வழிவகுத்துள்ளது.

இலங்கையில் வாழும் இந்து மக்களுக்கு எனது தீபாவளி வாழ்த்தினை தெரிவிப்பதோடு, மகிழ்ச்சிகரமான தீபாவளியாக இது அமைய வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

# பிரதமரின் ஐ.நா. உரையை திரிபுபடுத்தி எதிர்க்கட்சி அரசியல் லாபம் பெற முயற்சி

## சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது அமைச்சர் முஹம்மது உரை

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ஆற்றிய உரையை திரிபுபடுத்தி எதிர்க்கட்சியினர் குறுகிய அரசியல் லாபம் பெறமுயல்கின்றனர் என்று அமைச்சர் எம்.எச்.முஹம்மது நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

பிரதமரின் ஐ.நா. உரையைக் கண்டித்து கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் முஹம்மது உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஈராக் மக்களின் துயரத்தை நாம் அறிவோம். நான் பலமுறை ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளேன். சதாம் ஹுசைன் ஒரு சர்வாதிகாரி. ஈராக் - ஈரான் பிரச்சினையின்போது, ஈரான் ஒரு முஸ்லிம் நாடு. அதன் மீது போர் தொடுக்கக்கூடாது எனக் கூறிய தனது அமைச்சர் ஒருவரையே அவர் வாயில் சுட்டுப்படுகொலை செய்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டிலுள்ள பெரும்பாலான முஸ்லிம்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அவரது ஐக்கிய நாடுகள் சபை உரையை திரிபுபடுத்தி அரசியல் இலாபம் பெற முயற்சிப்போரை இந்நாட்டு முஸ்லிம்கள் இனங்கண்டுகொள்வர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

ஜே.பி.வி. உறுப்பினர் அஞ்சான் உம்மா சபையில் அப்பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் உலக முஸ்லிம் நாடுகள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை பிரதமரின் உரை சிதறடித்துள்ளது என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அமெரிக்கா நடத்திய தாக்குதலை உலக நாடுகள் கண்டிக்கின்றன. பிரதமரின் உரை நமது நட்பு நாடுகளைத் தலைகுனியச் செய்துள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலை முன்னர் ஆதரித்த நாடுகள் கூட இன்று தமது தவறை உணர்ந்துள்ளன. அமெரிக்காவின் கைப்பொம்மையாக பிரதமர் செயற்படுகின்றார்.

மணிராசக் குளத்துக்கு ஊடகவியலாளர்கள் சென்றபோது அமெரிக்காவில் தயாரித்த ஆயுதங்களைப் புலிகள் வைத்திருந்ததைக் கண்டுள்ளனர் - இவ்வாறு அவர் கூறினார். (எ)

# சுபிட்சமிகு யுகத்தை உருவாக்க அனைவரும் கைகோர்ப்போம்!

## தீபாவளிச் செய்தியில் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு,ஒக்.24

சுபிட்சமிகு யுகத்தை உருவாக்கும் இலட்சியம் வெற்றிபெற அனைவரும் கைகோர்ப்போம்!

- இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தீபாவளித் திருநாளானது அனைத்து இந்துமக்களுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த திருநாளாகும். அறிவுஞானம், சுபிட்சம் போன்ற வாழ்வின் உன்னத முன்னுதாரணங்களே இந்தத் தினத்தால் துலக்கம் பெறுகின்றன. அவை இந்துப் பண்பாட்டின் மகோன்னத சம்பிரதாய இலட்சணங்களை பிரதிபலிப்பவையாகும். ஆகவே, மனிதரிடத்தில் காணப்படும் சமத்துவமின்மை, ஆணவம், பெருமை போன்ற பலவீனங்களை அகற்றி, நல்வழிக்கு இட்டுச் செல்லக் கூடிய ஒரு சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்துவது காலத்துக்கு உகந்ததாகும்.

இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே சமாதானமும், ஐக்கியமும் அத்தியாவசியமாகியுள்ள இக்காலகட்டத்தில் அனைவருக்கும் சமமான உரிமைகளுடனான மனித உரிமைகளை நன்கு பேணுகின்ற ஜனநாயக சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதிலும் எமது கவனத்தைச் செலுத்த இது நல்லதொரு சந்தர்ப்பமுமாகும். எம் அனைவரினதும் இலட்சியமாக அமைய வேண்டியதும் அதுவேயாகும்.

அனைவருக்கும் உண்மையான சமாதானத்தைத் தருகின்ற சுபிட்சமிகு ஒரு யுகத்தினை உருவாக்கும் இலட்சியம் வெற்றிபெற நாம் அனைவரும் ஒன்றாக கைகோர்த்துச் செல்வதன் முக்கியத்துவத்தையும் நான் இங்கு விசேடமாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்து பக்தர்கள் அனைவரினதும் வளமான எதிர்காலத்திற்கு எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் - என்றுள்ளது. (ஒ)

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

# குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம்,ஒக்.24

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டிலான தேசிய தீபாவளி விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் மங்கள இசை, திருமுறை ஓதுதல், ஆசியுரை, சிறப்புரை, இந்துமத குருமார் கௌரவிப்பு ஆகியன இடம்பெறவுள்ளன.

தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள பேரூர் ஆதின இளவரசு தவத்திரு மருதாசலம் அடிகளாரின் சிறப்புச் சொற்பொழிவு, வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசைக்கச்சேரி ஆகியன விசேட நிகழ்வாக இடம்பெறும்.

தீபாவளி ஞாபகார்த்த முத்திரையும் தபால் உறையும் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4.45 மணிக்கு இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறும். (எ-3-10)

# நூல் வெளியீட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.24

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் எழுதிய சைவசமய தரிசனம் (சமயக் கட்டுரைகள்) நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் சுடர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் வாழ்த்துரையை அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவரும் பாராட்டுரையை பண்டிதர் வேபேரின்பநாயகமும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் ஆய்வுரையை சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை நிகழ்த்துவார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.24

தென்கிழக்கு பல்கலைக்கழக வருகைப் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் எழுதிய 'ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா பிரதம அதிதியாகவும், வடமராட்சி அர [illegible] ரவு அதிதியாகவும் கலந்துகொள்வர். (எ-6)

### பிரதமருக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாள் ஒதுக்கி காத்திருக்கின்றோம்

## எதிர்க்கட்சியினருக்கு மஹிந்த சமரசிங்க சவால்

கொழும்பு,ஒக்.24

எதிர்க்கட்சியினர் பத்திரிகைகளில் தான் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாள் ஒதுக்கி வைத்துவிட்டு அதை எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது. கொண்டு வந்து பார்க்கட்டும்.

ஆளும் கட்சி பிரதம கொரடாவும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு சவால் விடுத்தார்.

பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தி குறித்து ஜே.வி.பி. நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பிப் பேசும்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னுரிமை வழங்கும்படி கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் பணிப்புரை விடுத்திருந்தார்.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் முன்னுரிமை கொடுத்துள்ளனரா என்று சபாநாயகரிடம் கேட்டோம். அவர் 'இல்லை' என்றார். ஆனால், ஜே.வி.பி. உறுப்பினர் அஞ்சான் உம்மா. ஐ.நா. சபையில் பிரதமர் ஆற்றிய உரையைக் கண்டித்து சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றுக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார். அதற்கு முழு நாள் ஒதுக்கியுள்ளோம். எதிர்க்கட்சியினர் பத்திரிகைகளில் மாத்திரமே பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான மங்கள சமரவீரவும் வருகை தந்திருக்கவில்லை - இவ்வாறு அமைச்சர் கூறினார். (எ)

# பனை வள அபிவிருத்தி குறித்து கிளிநொச்சியில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.24

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தின் ஏற்பாட்டிலான கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

முதல்நாள் கருத்தரங்கு வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பனை பயிர் வள அபிவிருத்தி, தெங்குப் பயிர் வள அபிவிருத்தி, பனை, தென்னை வளங்களை ஜீவனோபாயமாகக் கொண்ட தொழிலாளர்களுக்கான புனர்வாழ்வும் புனரமைப்பும் பனை, தென்னை வளங்களின் நிறுவனக் கட்டமைப்புக்களும் அதன் விஸ்தரிப்புக்களும் பொருளாதார நிதி அம்சங்கள் ஆகிய தலைப்புக்களில் கருத்துரைகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் கருத்தரங்கு முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி.சபாரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பனஞ்சாற்று உற்பத்திப் பொருளாதாரமும், அதன் தொழில்நுட்பமும், சந்தைப்படுத்தலும், பனைசார் உற்பத்திப் பொருளாதாரமும் சந்தைப்படுத்தலும், பனம்பழம் சாற்று உற்பத்தி பொருளாதாரமும் அதன் தொழில்நுட்பமும் சந்தைப்படுத்தலும், தெங்குப் பயிரின் உற்பத்திப் பொருளாதாரமும் அதன் தொழில்நுட்ப அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும் ஆகிய தலைப்புக்களில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இருநாள் கருத்தரங்கிற்கும் முன்னதாக பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், கூட்டுறவுக் கொடி ஏற்றல், அக வணக்கம் ஆகியன இடம்பெறும். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி புஷ்ஷின் விஜயத்தை கண்டித்து ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் களேபரம்!

கான்பரோ,ஒக்.24

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பெரும் களேபரம் நிலவியது. ஜனாதிபதி புஷ் அங்கு விஜயம் செய்வதைக் கண்டித்தும் ஈராக், ஆப்கானிஸதான் ஆகிய நாடுகளை ஆக்கிரமித்ததைக் கண்டித்தும் அங்கு கடும் எதிப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் நாடாளுமன்றம் சுமார் இரண்டு மணிநேரம் அல்லோலப்பட்டது. அதேநேரம், ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றிற்கு வெளியே முற்றுகையிட்டிருந்தனர்.

ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் தம்பதியினர் நேற்று ஆஸ்திரேலியாவிற்குச் சென்றனர். அங்கு ஜனாதிபதி புஷ் அந்நாட்டுப் பிரதமர் மற்றும் உயரதிகாரிகளைச சந்தித்துக் கலந்துரையாடினார்.


ஜனாதிபதி புஷ்ஷும் அவரது பாரியாரும் அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கும் விஜயம் செய்தனர். நாடாளுமன்றில் ஜனாதிபதி புஷ்ஷுக்கு பலத்த எதிர்ப்புக் காட்டப்பட்டது.

நாடாளுமன்றில் உரையாற்றிய ஜனாதிபதி புஷ், 'ஆபத்து சூழ்ந்த வேளையில் வாழ்த்துச் செயதிகளை அனுப்பியபடி பார்த்துக் கொண்டிராமல், ஈராக்கிற்கும் ஆப்கானிஸ்தானிற்கும் படைகளை அனுப்பி அமெரிக்கப் படைகளுக்கு உதவியமைக்காக ஆஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி புஷ் அங்கு உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் எழுந்து நின்று - பெரும்சத்தமிட்டு - அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். அத்துடன் அவரைதொடர்ந்து உரையாற்றவிடாமல் குறுக்கீடும் செயதனர்.

'நாங்கள் அமெரிக்காவின் தலையாட்டிகள் அல்லர்' - என்று கிறீன் கட்சியின் செனட்டர்கள் உரத்துச் சத்தமிட்டனர்.

இதனால், நாடாளுமன்றில் இருந்து அவர்களை வெளியேறுமாறு சபாநாயகா உத்தரவிட்டார் ஆனல் அவாகள் வெளியேற மறுத்துவிட்டனர்.



செனட்டர்கள் உரத்துச் சத்தமிட்ட போது தனது உரையை நிறுத்திய ஜனாதிபதி புஷ், அவர்கள் தமது ஆதங்கங்களை தெரிவித்து முடித்த பின்னர் தொடாந்து உரையாற்றினார்.

'நான் சுதந்திரமாகப் பேசுவதையே விரும்புகிறேன்' - என்று புன்னகைத்தபடி கூறிய ஜனாதிபதி புஷ் தனது உரையைத் தொடர்ந்து நிகழ்த்தினார்.

தனது உரையின் போது பிரதமர் ஹோவார்ட்டின் துணிச்சலை அவர் வெகுவாகப் பாராட்டினார்.

அங்கு அமெரிக்கா மேற்கொண்டு வரும் போர் குறித்து ஆட்சேபனை தெரிவித்து 41 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு ஒன்றை ஜனாதிபதி புஷ்ஷிடம் கையளித்தனர்.

ஈராக்கில் இருந்து அச்சுறுத்தல் எதுவும் விடுக்கப்படாத நிலையில் அந்நாட்டின் மீது போர் திணிக்கப்பட்டதென்று அந்த மனுவில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அந்த மனுவுக்கு பதிலளித்த புஷ் - 'சதாமின் ஆட்சி முடிந்துவிட்டது, அதற்காக எவரும் ஓலமிடத்தேவையில்லை' - என்று தெரிவித்தார். இதனால், நாடாளுமன்றில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதி புஷ்ஷின் இந்த உரை கண்டிக்கப்பட வேண்டும் என்று அங்கிருந்த செனட்டர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றில் இந்த களேபரம் நடந்து கொண்டிருந்த போது, நாடாளுமன்றத்திற்கு வெளியே பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றை சூழ்ந்துநின்று உரத்த குரலில் கோஷங்களை எழுப்பினர்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தம்பதி ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்ததைக் கண்டித்தே நாடாளுமன்றத்தைச் சூழ்ந்து அவர்கள் முற்றுகையிட்டனர். முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலஸாருக்கும் இடையே மோதல்களும் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்திலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் பொலஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அங்கு நின்றவாறே ஆர்ப்பாட்டக்காரர்கள் உரத்த குரலெழுப்பி அமெரிக்காவையும், ஜனாதிபதி புஷ்ஷையும் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க முற்பட்ட பொலஸாருடன் சிலர் மோதலிலும் ஈடுபட்டனர். பொலீஸார் பதிலுக்கு குண்டாந்தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியும் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

நாடாளுமன்றத்திலிருந்து ஜனாதிபதி புஷ் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமெரிக்கத் தூதரகத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்தையும் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

## 'கொன்கோட்' விமானத்துக்கு இன்று பிரியாவிடை

உலகின் மிகப் பிரபலமானதும், ஒலியைவிட வேகமாகப் பறந்து செல்லக் கூடியதுமான 'கொன்கோட்' விமானம் பயணிகள் சேவையில் ஈடுபடுவது இன்றுடன் முடிவுக்கு வருகிறது.

பிரிட்டிஷ் விமானசேவை நிறுவனமும் பிரெஞ்சு விமானசேவை நிறுவனமும் 27 ஆண்டுகளுக்கு முன்னர் பயணிகள் சேவையில் கொன்கோட் விமானத்தை அறிமுகப்படுத்தின. அன்றிலிருந்து உலகின் பல நாடுகளுக்கும் கொன்கோட் விமானங்கள் சேவையில் ஈடுபட்டுவந்தன.


இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் 'கொன்கோட்' விமானம் பல ஆண்டுகளின் முன்னர் தரையிறங்கிச் சென்றது. கொன்கோட்' விமானம் எழுப்பும் பேரிரைச்சல் காரணமாக 'கொன்கோட்' விமானம் தமது விமான நிலையங்களில் தரையிறங்கத் தடைவிதித்த நாடுகளும் உள்ளன.



இந்த விமானங்களுக்கு அதிக எரிபொருளகள் செலவாவதாலும், அதன் உற்பத்தி மற்றும் பராமரிப்புச் செலவு அதிகமாக உள்ளதாலும், இந்த ரக விமானங்களை பயணிகள் மற்றும் வர்த்தக சேவைகளில் ஈடுபடுத்துவது இன்றுமுதல் முடிவுக்கு வருகிறது.

தனது கடைசிப் பயணத்தை மேற்கொள்ள முன்னர் பிரிட்டிஷ் விமான நிலையங்களிடையே கடந்த வாரம் 'கொன்கோட்' விமான சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதன் போது அதில் பயணச்சீட்டுகளைப் பெற உலகின் பல பாகங்களிலிருந்து சென்றிருந்த விமான ரசிகர்கள் முண்டியடித்தனர். அதேசமயம் தமது நகர விமான நிலையங்களில் 'கொன்கோட்' தரையிறங்கிய போது ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு நின்று பிரியாவிடை அளித்தனர்.

இன்று ஹர்டிவ் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வேல்ஸ் விமான நிலையத்துக்கு செல்வதுடன் புகழ்பெற்ற 'கொன்கோட்' விமானத்தின் பயணிகள் சேவை முடிவுக்கு வருகிறது.



பிரியாவிடைக்கு முன்பாக பிரிட்டனில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்ட 'கொன்கோட்' விமானம் நேற்று ஹர்டிவ் விமான நிலையத்தில் தரித்து நின்றபோது...

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் காஷ்மீரில் கொலை!

திருமணவிழா நடைபெற்ற மண்டபத்தினுள் புகுந்த துப்பாக்கிதாரிகள் ஏழுபேரை சுட்டுக்கொன்றனர். இந்தக் கொடூரச் சம்பவம் காஷ்மீரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இரண்டு குடும்பத்தவர்க்கு இடையில் இடம்பெற்றுவந்த தகராறின் காரணமாக இந்தக் கொடூரம் நடந்ததாக காஷ்மீர் பொலீஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

உலக அரங்கில்

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

புல்தோடா என்ற இடத்திலுள்ள திருமண மண்டபத்தினுள் திடீரென அறுவர் துப்பாக்கிகளுடன் புகுந்தனர்.

அங்கு அவர்கள் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில், சம்பவ இடத்திலேயே ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிப்பிரயோகம் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடிய நால்வரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

## தடுப்புச்சுவர் கட்டும் பணி தொடரும்; ஐ.நா.பொதுச்சபைக்கு இஸ்ரேல் பதிலடி!

ஜெருசலேம்,ஒக்.24

இஸ்ரேலையும், பலஸ்தீனத்தையும் பிரிக்கும் தடுப்புச்சுவர் கட்டும் பணி தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்திருக்கிறது.

தடுப்புச்சுவர் கட்டும் பணியை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று ஐநாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

அத்துடன், மேற்குக்கரையில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட தடுப்புச் சுவரையும் அகற்ற முடியாதென இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐநா. பொதுச்சபையில் செவ்வாய்க்கிழமை இரவு நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை, இஸ்ரேல் புதன்கிழமை நிராகரித்திருக்கிறது.

இந்தத் தீர்மானம் குறித்து அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்ட பின்னரே மேற்படி அறிவிப்பை இஸ்ரேல் வெளியிட்டிருக்கிறது.

பலஸ்தீனத் தற்கொலைப்படையினர் இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதை கட்டுப்படுத்தவே தடுப்புச்சுவர் அமைக்கப்படுகிறது. எனவே, அதனை இடைநிறுத்தும் பணியோ அல்லது கட்டிமுடிக்கப்பட்ட தடுப்புச்சுவரின் ஒரு பகுதியை அகற்றும் பணியோ நடைபெறமாட்டாது என்று இஸ்ரேல் அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பை அமைச்சரவைப் பேச்சாளர் யஹீத் ஒல்மெல்ட் வெளியிட்டார்.

இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நாவின் தீர்மானத்தை இஸ்ரேல் கடைப்பிடிக்காவிடில் அந்த நாட்டிற்கு எதிராக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் அடுத்த மாத ஆரம்பத்தில் அறிவிப்பார்.

இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு பலஸ்தீனம் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது. அமெரிக்காவின் துணையுடன் நினைத்ததைச் செய்துவிடலாம் என்ற துணிவில் இஸ்ரேல் செயற்பட்டு வருகிறது என்று பலஸ்தீன பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

## அமெ. நிறுவனங்கள் தாக்கப்படும்; நேபாளத் தீவிரவாதிகள் மிரட்டல்!!

காத்மண்டு,ஒக்.24

நேபாளத்தில் இயங்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். அங்குள்ள அமெரிக்க நிறுவனங்கள் உடனடியாக மூடப்பட வேண்டும், இல்லையேல் அந்த நிறுவனங்கள் தாக்கப்படும் என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர்.

பொதுமக்கள், பொலீஸ் அதிகாரிகளையும், அரச கட்டடங்களையும் இனிமேல் தாக்கமாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தலைமை கூடி இந்த முடிவை எடுத்ததாக அந்த இயக்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொலைபேசிக் கட்டடங்கள், பாரம்பரிய நூதனசாலைகள் ஆகியவற்றின் மீது இனிமேல் தாக்குதல் நடைபெறாது. மக்களிடம் பணம் பறிக்கும் நடவடிக்கையும் இனிமேல் இருக்காது.

அமெரிக்க நிறுவனங்கள் நேபாளத்தில் இருந்து உடனடியாக வெளியேறிவிடுவதே சிறந்தது. இல்லாவிடின், அந்த நிறுவனங்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடைபெறும் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் அபிவிருத்தி நிதிக்காக,
தீபத் திருநாளில் தீபமேற்ற நட்சத்திரங்களையே அழைக்கும்.........
மாபெரும் நட்சத்திர இரவு
☆ பக்திப்பாடல்கள் ☆ புரட்சிப்பாடல்கள் ☆ சினிமாப்பாடல்களுடன்
S.G.சாந்தன் & ராகம்ஸ் இசைக்குழு
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை 7.00 மணிக்கு
வாருங்கள்! பாருங்கள்!! கொண்டாடுங்கள்!!!
பிரதான அனுசரணை:
அண்ணா தொழிலகம், சுந்தர்சன் [மானிப்பாய்],
மக்கள் வங்கி, இலங்கை வங்கி.
(தி-30988) (14-13-18-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டி

சைக்கிளோட்ட வீரர்
**அமரர் ஐ.செல்வராசா (செல்வம்) வின்**
ஞாபகார்த்தமாக பின்வரும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

1. **சைக்கிள் ஓட்டப்போட்டி**
   (ஆண்கள் 60 கி.மீற்றர், பெண்கள் 30 கி.மீற்றர்)
2. **மரதன் ஓட்டம்** (ஆண்கள், பெண்கள்)
3. **கரபந்தாட்டம்** (செற்றப்)

எதிர்வரும் முதலாம், 2ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் இடம்பெறவுள்ளன.

பங்குபற்றுபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்
**செ.வைகுந்தன்**
வளர்பிறை விளையாட்டுக்கழகம், மயிலணி, சுன்னாகம்.
(சி-30987) தொலை. இல. 0602212744. (21-14-16)

## சுன்னாகத்தில் சுவரொட்டிகள்

வலிகாமம் பகுதியில் அதிகரித்து வரும் கசிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எச்சரிக்கை விடும் வகையிலான சுவரொட்டிகள் சுன்னாகம் பகுதியில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

'எமது சமூகத்தின் எதிரியான கசிப்பு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். கசிப்பு தொடர்பாக இனம் காணப்படுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள்" என சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுன்னாகம் சுர்த ரோடைப் பகுதிகளில் அண்மைக காலத்தில் கசிப்பு உற்பத்தியும் கசிப்பு பாவனையாளர்களும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.(ம-152)

*மலரும் தீபாவளித் திருநாளில் எம் இனிய நல்வாழ்த்துக்கள்!*

**விவசாயப் பெரு மக்களே!**
**சகல வகையான C.I.C உரவகைகள்**
**கிருமி நாசினிகள் (C.I.C காக்குரோஸ்)**
**விதை பொருள்கள்**
*அனைத்தையும் ஒரே இடத்தில்*
*அதிகூடிய விலைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ள*
**கஜமுகன் ரேடர்ஸ்**
அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
(24002) T.P. 0777 724505 (21-14-16)

## 76 ஆவது ஜெயந்தி தின விழா
## 24.10.2003



ஸ்ரீ முருகன் ஆத்மீக
**அருள் மார்க்கண்டு சுவாமிகள்**

மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் இன்று (24.10.2003) வெள்ளிக்கிழமை சுவாமிகளின் 76 ஆவது ஜெயந்தி தின விழாவை அவரது அருளும், ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இதில் சுவாமிகளால் பட்டம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

*மானிப்பாய்.* (23379)(34-21-14-16) - முருகன் அடியார்கள்.

அழகிய நவீன மயமான புகைப்படங்களை நல்ல முறையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:
**நிலா அன் உதயன் போட்டோ, வீடியோ சென்ரர்**
ஏழாலை தெற்கு,
ஏழாலை.
(26-14-16-21) (23984)

பழைய, புதிய வீடியோ பிரதிகள் பெற்றிடவும்
அழகிய நவீன பாணியில் படங்கள்
பிறேம் போடவும்
இன்றே நாடுங்கள்:
**வசந்த் அன் விஜயன் படமாடம், வீடியோ சென்ரர்,**
**கே.கே.எஸ்.வீதி**
**இணுவில்.**
(இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)
(26-21-14-16) (23985)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணவர் மடிழ 08 - 10 - 1960
விண்ணவர் வாழ்வில் 25 - 10 - 2000



அமரர்
**கந்தப்பு தவராசா** (பவா)
(முன்னாள் சந்தைக் குத்தகையாளர், நெல்லியடி)

மூவாண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எமது துயர்!
அகலவில்லை உங்கள் நினைவு
தேடற்கரிய பொக்கிஷமே!
எமது உயிர் கலந்த தென் அமுதே
உம்மைப் பிரிந்த துயரத்தில்
கலங்குகின்றோம் நாம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (23939) (34-21-14-16)
உங்களைப் பிரிந்து துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

## நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை

மறைந்தும் எம் இதயத்தில் நீங்காது நிலைத்து நிற்கும்
எமது அன்புத் தெய்வம் வைத்திய கலாநிதி
**டாக்டர் உமாகாந்தன்** அவர்களின்

ஓராண்டு நிறைவில், வைத்தியசாலையைத் தொடர்ந்தும் நடத்துவதற்கு சிறந்த வைத்திய நிபுணர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி எம்முடன் இணைகின்றார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சகல வித நோய்களையும் குணமாக்க தனி மூலிகைகளான மருந்துகளே தொடர்ந்தும் கொடுக்கப்படவுள்ளன. அது மட்டுமல்ல,

முன்பு போலவே அனைத்து **எண்ணெய் வகைகளும் பாலர் முக்கூட்டு மாத்திரை, கிரந்திக் கோரோசனை** முதலியனவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இத்தீபாவளி நன்னாளில் எமது அன்புத் தெய்வமான வைத்தியகலாநிதி டாக்டர் உமாகாந்தன் அவர்களையும் நினைவு கூறுகின்றோம்.

முறிவு நெரிவு வைத்தியசாலை,
நாயன்மார்கட்டு. (23983) (25-14-16)
திருமதி ஜெ.உமாகாந்தன்.
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி க.சிறிக்காந்தா அவர்களின் அன்புத் தாயார்
**இராசரத்தினம் சிவஞானசுந்தரி**

அவர்களது மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கம் + பழைய மாணவர்

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,
ரக்கா வீதி, யாழ்ப்பாணம். (C/30986) (34-21-11-16)




## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் சச்சிதானந்தம்

கோட்டார் கலட்டி, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 33 வருடங்களாக (1998ஆம் ஆண்டுவரை), 'L' Block, Govt, Flats, பம்பலப்பிட்டியில் வசித்துவந்தவருமான சிவப்பிரகாசம் சச்சிதானந்தம் அவர்கள் (ஓய்வுபெற்ற செயலாளர், சுகாதாரத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை) 20.10.2003 திங்கட்கிழமை ஹமில்டன், நியூஸிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் Dr.ஸ்ரீகாந்தா (பேராசிரியர், கியோடோ பல்கலைக்கழகம், ஜப்பான்), காஞ்சனா (நியூஸிலாந்து) ஆகியோரின அன்புத் தந்தையும் வீணா, மிதுனா, டக்ஷனா, சச்சிகோ, சங்கீதா ஆகியோரின் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பத்மனாதன், மங்கயர்க்கரசி, வைகுந்தநாதன், சுவேந்திரநாதன் ஆகியோரின் இளைய சகோதரரும் Dr. P. சோதீஸ்சன் (நியூஸிலாந்து), சகீ (ஜப்பான்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை No. 1, Sen Wick Crecent Hill Crest, Hami -lton, Newzeland இல் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 121, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 5365 (23954) (29-12-18)
தகவல்:
இ.ஸ்ரீஸ்கந்தராஜா (பேறாமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிமலராஜன் படுகொலை: தூங்கும் விசாரணை!

"ஊடகவியலாளர் நிமலராஜன் மரணம் ஓர் அரசியல் படுகொலையாகும். அரசியல் வேறுபாடுகளே இக்கொலைக்குக் காரணம். தென்னிலங்கையில் ஒளிந்திருக்கும் சில கரங்களின் பின்னணி இக்கொலையுடன் தொடர்புபட்டிருக்கின்றது."

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறு கூறியிருக்கின்றார்.

இக்கருத்தில் புதிதாக எதுவுமில்லை. பொதுவாகத் தமிழ் மக்களின் - குறிப்பாக யாழ். மக்களின் - மனதில் உள்ள சந்தேகத்தையே அவரும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அதற்கு அப்பால் இவ்விடயம் குறித்து அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களே மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

"நிமலராஜன் படுகொலைக்கும் படையினருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. ஒரு தமிழ்க்கட்சிக்கு இக்கொலையுடன் தொடர்பு இருக்கலாம். ஆனால், இந்தக் கட்சிதான் கொலைக்குக் காரணம் என்று எம்மால் விரல் நீட்டிக் காட்ட முடியாது.

"ஆட்சியிலிருந்த அரசோ அல்லது ஆட்சியிலிருக்கும் அரசோ இக்கொலை தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்குமாயின், அதற்காக அக்குற்றவாளியைப் படைத்தரப்பு பாதுகாக்கின்றது என்று அர்த்தம் கொள்ளக் கூடாது. அது தவறு."

- இப்படி மேலும் கூறியிருக்கிறார் வடபகுதிக் கட்டளைத் தளபதி.

இந்தப் படுகொலைச் சம்பவத்திலும் அதன் விசாரணையிலும் தன்னை மேலும் பார்வையாளனாகக் காட்டிக் கொள்ளும் போக்கில் படைத்தரப்பு செயற்படுகின்றது. இந்த மெத்தனப்போக்கே நிமலராஜன் படுகொலைப் பாதகர்கள் சந்தோஷமாக வெளியில் நடமாடுவதற்கு இடமளித்திருக்கின்றது என்பது மக்களின் பரவலான கருத்து.

தீவகத்தில் தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெட்டியும் அடித்தும் படுகொலை செய்யப்பட்ட - கொடூரமாகத் தாக்கப்பட்ட - சம்பவத்தின் சூத்திரதாரிகள் எனக் கருதப்படும் சந்தேக நபர்கள், நீதிமன்றப் பிடியாணை இருக்கத்தக்கதாக யாழ். தீவகத்தில் நீண்டகாலமாக - சுதந்திரமாக - நடமாடியதும் - 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல தீவகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பொலீஸ் தரப்பும், படைத்தரப்பும் நீதிமன்றத்தில் கைவிரித்ததும் - சில சமயங்களில், அப்போது வடக்கில் கடமை புரியாத - தற்போதைய வடபகுதி தளபதிக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், நிமலராஜன் கொலையுடன் தொடர்புடைய இரண்டு விடயங்கள் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒன்று - படையினரின் அதிக பாதுகாப்புடைய யாழ். செயலகத்துக்கு மிக அண்மையில் படையினரின் பல காவலரண்களுக்கு மிகக்கிட்டவாகவுள்ள - தனது இல்லத்தில் வைத்தே, அதுவும் இராணுவம் பிரகடனம் செய்திருந்த ஊரடங்கு வேளையிலேயே, கொலைகாரக் கும்பல் ஒன்றால் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார். அவரைச் சுட்டும், பெரும் அதிர்வையும், சத்தத்தையும், அழிவையும் ஏற்படுத்திய கிரேனட்டுக்களை வெடிக்க வைத்தும் அட்டகாசம் புரிந்த பின்னரே அப்பகுதியிலிருந்து சென்றிருக்கின்றது கொலைகாரக் கோஷ்டி.

மற்றையது - இந்தப் படுகொலை சம்பவத்துக்கு முன்னர் இடம்பெற்ற சில விடயங்கள், இப்படுகொலை சம்பந்தமான புலன் விசாரணைகளில் கவனத்தில் எடுக்கப்படாமல் தொடர்ந்து புறந்தள்ளப்பட்டு வருவதாகும்.

2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது, யாழ். செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு பல கட்சிகள் மற்றும் இயக்கங்களின் பிரமுகர்கள் வந்தபோது, அதனைப் புகைப்படம் பிடித்து, புகைப்படங்களை கொழும்பில் தான் பணிபுரியும் ஒரு சிங்கள ஊடகத்திற்கு விலாசமிடப்பட்ட ஓர் உறையில் நிமலராஜன் அனுப்பிவைத்திருந்தார்.

இராணுவத்தினரால் வடக்கே கூட்டிவரப்பட்ட பத்திரிகையாளர் குழுவில் ஒருவரிடம் இந்த உறையை கொழும்பில் அஞ்சல் செய்வதற்காக அவர் கொடுத்தார். ஆனால், சில நாள்களின் பின்னர், நிமலராஜனினால் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படங்கள் கோண்டாவிலில் இராணுவத்தினரைக் கண்டு தப்பியோடிய புலிச் சந்தேக நபர் ஒருவரின் பொதிக்குள் இருந்து கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்து, நிமலராஜனுக்கு எதிரான இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஒரு விசாரணையை ஆரம்பித்தது.

நிமலராஜனைக் கைதுசெய்வதற்கான முயற்சிகள் கூட எடுக்கப்பட்டன. ஆனால், கொழும்புப் பத்திரிகைக்குத் தான் அனுப்பிய படங்களை சம்பந்தப்பட்ட செய்தியாளர் இராணுவ வாகனத்தில் சென்றசமயம் தவறவிட்டுவிட்டார் என்பதையும், அதைத் தனக்கு எதிராகப் பயன்படுத்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு முயல்கின்றது என்பதையும் இந்த விடயத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட பொலீஸ் குழுவிடம் நிமலராஜன் நிரூபித்தார். அதையடுத்து அந்தக் குற்றச்சாட்டும் விசாரணையும் வேறு வழியின்றி கைவிடப்பட்டன - இவை நிமலராஜனே சக பத்திரிகையாளர்களுடன் பரிமாறிக் கொண்ட தகவல்கள்.

ஆனால், இந்த விவகாரம் நடந்து - நிமலராஜனைச் சிக்கலில் மாட்டிச் சிறைக் கதவுகளுக்குப் பின்னால் தள்ளும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முயற்சி தோற்று - சில வாரங்களின் பின்னரே உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

ஆனால், இந்த விடயங்கள் தற்போதைய புலனாய்வு விசாரணைகளில் ஆராயப்பட்டன என்பதற்கான தகவல் ஏதும் இல்லை.

இந்தப் பின்னணியில் "கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்குப் பொறுப்பும் கடமையும் உள்ள அதிகாரிகள் தூங்குகின்றார்களா? அல்லது தூங்குபவர்கள்போல நடிக்கின்றார்களா?" - என்று மக்கள் சந்தேகப்படுவதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது?

## காலத்தின் பதிவு



தளர்ந்துவிடமாட்டோம்.... படம் : தீபன்

# கோப்பாயிலிருந்து சங்கானைக்குச் சென்ற காசநோயாளர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்!

### அதிகாரிகள் அலைக்கழிப்பதாக அவர்கள் விசனம்

சங்கானை,ஒக்.24

கோப்பாய் அரசினர் மருத்துவமனையிலிருந்து இடம் மாற்றப்பட்ட காசநோயாளர்கள் சங்கானை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். இதனால் தமக்கெனத் தகுந்த இடத்தை ஏற்பாடு செய்யாது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மை அலைக்கழிப்பதாக காசநோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

மயிலிட்டியில் முன்னர் காசநோய் மருத்துவமனை இயங்கி வந்தது. தற்போது மயிலிட்டி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கியுள்ளது. இதனால் கோப்பாய் அரசினர் மருத்துவமனையில் காசநோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தனர்.

கோப்பாய் மருத்துவமனை குடியிருப்புக்களின் மத்தியில் உள்ளது. அத்துடன், போதிய கட்டட, தளபாட வசதிகளும் அங்கில்லை. இதனால் அங்கு நெருக்கடி நிலவுகிறது. இந்நிலையில், காசநோயால் பீடிக்கப்பட்டவர்களை கோப்பாய் மருத்துவமனையில் வைத்துப் பராமரிக்க அப்பகுதி மக்களும் பிறநோயாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

காசநோயாளர்களிடமிருந்தும், அவர்களது கழிவுப் பொருள்களிலிருந்தும் தமக்கும் அந்நோய் பரவி விடக்கூடும் என்ற அச்சத்தினால் அப்பகுதி மக்களும், பிறநோயாளர்களும் காசநோயாளரை வேறிடத்துக்கு மாற்றும்படி நீண்ட காலமாகக் கோரி வந்தனர்.

இதனைத் தொடர்ந்து கோப்பாய் அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 4 நோயாளிகளையும் சங்கானை அரசினர் மருத்துவமனைக்கு மாற்றும்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பிரதிப் பணிப்பாளர் பணித்தார். அதற்கமைய நேற்றுமுன்தினம் புதன்கிழமை காசநோயாளர்கள் நால்வரும் கோப்பாயிலிருந்து சங்கானைக்கு அம்புலன்ஸ் வாகனத்தில் அனுப்பிவைக்கப்பட்டனர். ஆனால், சங்கானை மருத்துவமனையில் காசநோயாளரை தங்கவைக்க அப்பகுதிப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் காசநோயாளர்களுடன் அம்புலன்ஸ் வாகனம் மீண்டும் கோப்பாய் திரும்பியுள்ளது.

நோயால் வேதனைப்படும் நிலையில் தகுந்த இடத்தை ஏற்பாடு செய்யாது தாம் அலைக்கழிக்கப்படுவதாக காசநோயாளர்கள் விசனம் வெளியிட்டனர். உயர்பாதுகாப்பு வலயத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை இயங்கும் நிலையில், மயிலிட்டியில் காசநோய் மருத்துவமனையை மீண்டும் இயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தாலேயே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கிட்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது. (ஒ-29)

### தாபரிப்பு வழக்குகள் அதிகரித்து வருகின்றன

# கணவன் - மனைவி பிரிவதைத் தடுப்பதில் பொது அமைப்புகள் அக்கறை காட்டவேண்டும்!

### யாழ். மேலதிக நீதிவான் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.24

குடாநாட்டு நீதிமன்றங்களில் தாபரிப்பு வழக்குகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையை மாற்ற, கணவன் - மனைவி பிரிவதைத் தடுப்பதில் பொது அமைப்புகளும், கலாசாரத்தைப் பேணும் குழுவினரும் அதிக அக்கறை காட்டவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் கணவரிடமிருந்து தாபரிப்புப்பணம் பெற்றுத்தரக்கோரி நீதிமன்றங்களை நாடுவது குடாநாட்டில் தற்போது அதிகரித்துள்ளது. யாழ். நீதிமன்றில் நாளொன்றுக்கு இருபதுக்கும் மேற்பட்ட தாபரிப்பு வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் பெற்றபின் கூட கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர்.

இதனால் மனைவிமார் தமது அன்றாட வாழ்க்கைக்கு ஏதுமற்ற நிலையில் தாபரிப்புக் கோரி வழக்குத் தாக்கல் செய்கின்றனர்.

ஒருபுறம் மனைவி தாபரிப்புக் கோரி வழக்குத்தாக்கல் செய்ய மறுபுறமோ மனைவியைக் கைவிட்ட கணவன் மறுமணம் புரிந்துகொள்கிறான். வேறு சில கணவன்மார் தலைமறைவாகி விடுகின்றனர்.

நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும் பெரும்பாலான தாபரிப்பு வழக்குகளுக்கு எதிர் மனுதாரர்களான கணவன்மார் சமுகமளிப்பதில்லை. நீதிமன்றக் கட்டளை அனுப்பப்படும் போது சம்பந்தப்பட்டவர் எங்கே உள்ளார் என தமக்குத் தெரியாதென்றும் - அவருக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் - கணவரின் பெற்றோர் கூறிவிடுகின்றனர்.

மனைவியைக் கைவிட்ட கணவரின் நடவடிக்கைகளுக்கு அவர்களது பெற்றோரும் துணைபோகும் சம்பவங்களும் உள்ளன. இதனால் மனைவியைக் கைவிட்ட ஆண்கள் பலர் துணிந்து வேறு திருமணம் புரிகின்றனர்.

இந்நிலையில், முன்னைய மனைவியின் நிலை பரிதாபகரமாகிறது. அவர்கள் தமது வாழ்க்கைச் செலவுக்கு தாபரிப்புக் கோருகின்றனர். எனினும், கணவன் தலைமறைவாகியுள்ளதால் அதுவும் அவர்களுக்கு கிடைக்க வழியேற்படாது இழுபட நேர்கிறது.

எனவே, இவற்றைத் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை சமூக அமைப்புக்களும் கலாசாரத்தைப் பேணும் குழுவினரும் விரைந்து மேற்கொள்ளவேண்டியுள்ளது.

கணவன் மனைவியை விட்டுப் பிரிந்த உடனேயே அவர்களை ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கையில் இந்த அமைப்புக்கள் ஈடுபடவேண்டும். இதன் மூலம் பெண்கள் பாதிப்படைவதை வெகுவாகத் தவிர்க்கமுடியும். இதற்கு சமூக மட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம் - என்றார். (ஒ-8)

### நாளை

ஐப்பசி 08
சனிக்கிழமை
(25.10.2003)
திதி : அமாவாசை
முன்னிரவு 7.20 வரை.
நட்சத்திரம் : சித்திரை
மாலை: 5.53 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம்: 3.02-4.32
[illegible] 9.02 - 10.32
([illegible])

### உதயவாக்கு

முன்னேறவேண்டும் என்று நினைப்பது இலகுவானது. எதனை நோக்கி முன்னேறுவது என்று தீர்மானிப்பதே கடினமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற விவகார அமைச்சர் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.24

நாடாளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணம் வரும் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர் வை.ஆர்.டி.சில்வா, சிரேஷ்ட செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் வருகை தருகின்றனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி காலை வருகைதரும் அமைச்சர் குழுவினர் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயலாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த அலுவலர்களையும் யாழ். செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

(ம-5)


அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது மங்களகரமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்



- திருமணப் பட்டுப் புடைவைகள்
- பட்டுவேட்டிகள்
- சோலிகிட்
- சல்வார் கிட்
- கவுண்
- இந்தியன் சாறிவகைகள்
- ஸ்கேட் & பிளவுஸ்
- சேட்டிங்
- சேட்ஸ்
- பேபிசூட்
- சிறுவர் சிறுமியர்க்கேற்ற றெடிமேட் ஆடைகள்.

மற்றும்
இன்னோரன்ன ஆடைவகைகளுக்கு
கைராசியான ஸ்தாபனங்கள் தான்

புதிய ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸ்

70,71A, நவீனசந்தை உப்புறம், யாழ்ப்பாணம் T.P.5571 (சி-30955)

121/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் T.P.5573 (14-21-35)



ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் மூன்றாம் கட்டமாக சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், யாழ்ப்பாணம் மற்றும் தீவக பிரதேச செயலர் பிரிவுகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப்பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்) காலை 10.00 - 2.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்புகொள்ளவும்.

உங்கள் தொடர்புகளுக்கு: ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், 47/2, ஆடியபாதம் வீதி (மருத்துவபீடம் அருகில்), திருநெல்வேலி.

(C-30974) (14-21-35)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

அன்னை மடியில் 15 - 06 - 1952



ஆண்டவன் அடியில் 25 - 09 - 2003

### திருமதி சௌந்தரராணி அருந்தவராசா

நாளை (25-10-2003) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'தில்லையம்பதி'
கோந்திரம் பற்றை,
தும்பளை, பருத்தித்துறை.


கணவர்: நா.அருந்தவராசா,
பிள்ளைகள்: அஜந்தன்,
சிந்துஜன், சுபாசினி.

(23787) (14-21-35)


cba நாம் யாழ் வருகின்றோம்

மினி இன்போடெல் கண்காட்சி அக்டோபர்
மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் 24,25,26

இந்த தட்டச்சு இயந்திரம்
தமிழிலும்,
ஆங்கிலத்திலும்,
சிங்களத்திலும்
தட்டச்சு செய்கிறது.
தமிழிலும்,
ஆங்கிலத்திலும்,
சிங்களத்திலும்
மின்னஞ்சல் அனுப்புகிறது.





CBA Wisdom Writer

நம்பிக்கைக்குரிய மக்களிடமிருந்து
வருவது இந்த உத்தரவாதம்

எலெக்றிக் / கை இயக்க
ஸ்ரென்சில்
டுப்ளிகேற்றர்.

இதன் மேலதிக நன்மைகள்
- விசேட தாள் தேவையில்லை.
- எல்லா வகையான ஸ்ரென்சில்களும் தீந்தைகளும் பாவிக்கலாம்.
- எல்லா வகையான துவாரங்களும் உள்ள ஸ்ரென்சில்களையும் உபயோகிக்கக்கூடிய மாற்றியமைக்கும் ஊசிகள்.
- உயர் தயாரிப்புத் திறன்.
- சுலபமான பராமரிப்பு.

ELECTRICAL/
MANUAL
STENCIL
DUPLICATOR



போலி நகைகளுக்கு
இனி இடமில்லை.
MIRAGE GK-200
PRECIOUS
METAL TESTER

- மிகத் துல்லியமான கணிப்பீடு.
- அதிவேக செயல்முறைத்திறன்.
- கல்லில் உராஞ்சுதல் அவசியமில்லை.
- சேதாரமில்லை.
- இரசாயனப் பதார்த்தங்கள் அவசியமில்லை.
- ஆபரணங்களுக்கு சேதாரமில்லை.
- 200 கிராம் வரையிலான ஆபரணங்களை பரிசோதிக்கக்கூடியது.
- உலகப் பிரசித்தி பெற்ற ஜப்பானிய தொழில்நுட்பம்.



விசாரணை:
cba சிலோன் பிசினஸ் அப்பிளையன்சஸ் லிமிடெட்
HOTLINES: 0777-562729, 0777-390085
112, ரீட் அவன்யூ, கொழும்பு 4. தொலைபேசி: 2589908, 2589909, 2589913. தொலைமடல் (ஃபக்ஸ்): 2503121

நம்பகமான சேவை, நம்பகமான ஸ்தாபனம், நம்பகமான உற்பத்திகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆயரின் தீபாவளிச் செய்தி


எமது இந்துசமய சகோதரர்கள் தீபத் திருநாளைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் அவர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்தத் தீபாவ்ளி தினம் அவர்களுக்கு அன்பு வழி மகிழ்வையும் உறவு வழி பகிர்வையும் நிறையத்தரும் தினமாக இருக்க ஆசிக்கிறோம்.

இன, மத, நிற, மொழிகளைக் கடந்து அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான ஒரு பொருளாக அனைத்து மனிதர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக ஒளி விளங்குகிறது. ஒளியின் விழாவினை எல்லா சமயத்தவர்களும் தமது சமய சம்பிரதாயங்களுக்கும் முறைகளுக்கும் ஏற்ற வகையில் கொண்டாடுகிறார்கள்.

இந்துசமய சகோதரர்கள் தமது சமய பாரம்பரியத்திற்கேற்ப ஆண்டின் இறுதிப் பகுதியில் தீபத் திருநாளைக் கொண்டாடுவதும் அதே காலப் பகுதியில் கத்தோலிக்க மக்கள் தம் சமய பாரம்பரியத்தின்படி ஒளியின் விழாவினை கொண்டாடுவதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

கத்தோலிக்க மக்களும் இந்து சமய மக்களும் அருகருகே பின்னிப் பிணைந்து நீண்டகாலமாக அன்புறவில் வாழ்ந்துவரும் எமது மண்ணிலே இது போன்ற விழாக்கள் உறவை வளர்க்கவும் புரிந்துணர்வை அதிகரிக்கவும் பெரிதும் துணைபுரிகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கான் நகரிலிருந்து பிற சமயத்தவர்களின் விழாக்களின் போது வாழ்த்துக்களும் செய்திகளும் அனுப்புகின்ற ஒரு வழக்கம் இருந்து வருகின்றது. இந்தவகையில் பாப்பரசரின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் சபை தலைவர் பேராயர் மைக்கல் ஆண்டகை 2003 ஆம் ஆண்டு தீபாவளி பெருவிழாச் செய்தியை அனுப்பியுள்ளார். அதில் இந்து சமய சகோதரர்களும் கத்தோலிக்க சமயத்தவர்களும் மனித மாண்பை கட்டியெழுப்புவதில் முன்னிற்கவேண்டும் என்று அவர் அழைப்பு விடுக்கிறார்.



**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர்.

அவர் தமது செய்தியில், எல்லா மனிதர்களினதும் உயர் நிலையான கடவுள் நம்பிக்கையை புதுப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் மற்ற மனிதர்களுடனான உறவுகளை புதுமெருகூட்டவும் சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு, கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரினது மாண்பை மீளக் கண்டுபிடிக்கவும் மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும் துணிவுடன் பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கின்றன.

ஒவ்வொரு மனிதரது மாண்பும் எல்லோரையும் படைத்த கடவுளிடமிருந்தே பெறப்படுகிறது. இறை நம்பிக்கையுடைய ஒவ்வொருவரது வாழ்விலும் இந்த மனித மாண்பை வளர்த்துப் பேணிப் பாதுகாக்கும் பணி முக்கியமானது. எப்படி ஒளி இருளை மேற்கொள்கிறது? எப்படி நன்மை தீமையை வெற்றிகொள்கிறது? எப்படி மன்னிப்பின் மூலமாக வெறுப்பு அன்புக்கு இடமளிக்கிறது? போன்ற சிந்தனைகள் மூலமாக இந்து சமய பாரம்பரியத்தில் தீபாவளிப் பெருவிழாவானது சிந்தனைக்கு நல்விருந்தளிக்கின்றது என்று தெரிவிக்கிறார்.

எமது மண்ணின் கடந்த கால போர் அனர்த்தங்களால் மனித மாண்பு சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த மனித மாண்பை தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையோடு கட்டியெழுப்ப எம்மிடையே உறவுகளை வளர்த்துக் கொள்ள தீபாவளி போன்ற விழாக்கள் பெரிதும் துணைபுரிய வேண்டுமென விரும்புகின்றோம்; வாழ்த்துகின்றோம். ✣

## முதியோர் இல்லத்தில் தீபாவளி விழா

கைதடி முதியோர் இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு தீபாவளியையொட்டி விசேட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மானிப்பாயில் இயங்கிவரும் இனிய இதயங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளவர்கள் பங்குபற்றும் கலை நிகழ்ச்சிகள், இனிய இதயங்கள் அமைப்பினரின் நாடகம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவரின் இசை நிகழ்ச்சி ஆகியவை இடம்பெறவுள்ளன.

# அமைச்சர் ஜயலத் வாழ்த்து!

உலகம் எங்கும் பரந்து வாழ்கின்ற கோடிக்கணக்கான இந்துக்கள் தீபாவளி பண்டிகையினை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் தீபாவளி தினம் இம்முறை வழமையான கொண்டாட்டங்களிலும் பார்க்க ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இரு தசாப்தங்களாக நிலவிய யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும் ஏனைய பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் கொண்டாடப்பட்ட தீபாவளிப் பண்டிகை இன்று சமாதானம் தோற்றுவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அமைவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் - என்று அமைச்சர் ஜயலத் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சமாதான சூழ்நிலை மேலும் தொடர வேண்டும். அரச மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையிலான பேச்சு வெற்றி பெற்று நாட்டில் சகல இன மக்களும் உரிமையோடும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ இன்றைய நன்நாளில் பிரார்த்திப்போமாக! என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனைவருக்கும் இறையருள் கிடைக்கட்டும்

மூவுலகில் உள்ளோரையும் துன்பத்துக்குள்ளாக்கிய நரகாசுரனை பாமாதேவி சம்ஹாரம் செய்து மூவுலகத்தவரையும் இன்பக் கடலில் ஆனந்தமாக வாழவைத்த நாளே தீபாவளியாகும்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் வெளியிட்டுள்ள தீபாவளிச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் வாழுகின்ற இந்து மக்களால் கொண்டாடப்படும் தீபத் திருநாளான இப்புனித நாளில் வீடுகள் தோறும் சுத்தம்செய்து, எண்ணெய் தேய்த்து, ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி ஆலய வழிபாடு செய்த பின்னர் உற்றார், உறவினர்களுடன் விருந்துண்டு ஆனந்தமாகத் தீபத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இறை அருள் கிடைக்கவும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் மறைந்திருக்கும் தீய இருள் அகன்று ஞானஒளி பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல இறையருள் துணைகொண்டு எனது பரிபூரண அருளாசிகளை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பாட்டி கண்ட தீபாவளி

முடித்த அப்புது மாப்பிளை
மூன்று சேலைகள் எடுப்பேன் என்றான்
அடித்துண்ண கிடாய தொன்றை
அவிழ்க்கவா என்றான் மைந்தன்
குடித்திட போத்தல் ஒன்று
கொண்டுவா என்றான் மாமன்
படுக்கையாய் கிடக்கும் பாட்டி
பரிதாபமாய் ஒன்று சொன்னாள்
விடுத்திடு வீண் கொண்டாட்டத்தை
வீண் செலவு இனி எதற்கு
தொடுத்திட கொடிய யுத்தம்
துடிக்கிறார் தெற்கில் நாளும்
படுக்கையாய் கிடக்கும் நாளும்
பாடையில் ஏறு முன்பு
அடுத்த தீபாவளிக்கு முன்பு
அமையுமோ இடைக்கால அரசு என்றாள்.

\- விகடகவி

## சொந்தமண் கிடைத்திடுமா?

தீய அசுரனை தீயிட்ட
தித்திக்கும் தீபத்திருநாளே!
உன் வரவிலாவது...
படைமுகாம்கள், பாதுகாப்பு வலயங்கள் ஒழிந்து
அகதிமுகாமுக்குள்ளும் ஓலைக்குடிலுக்குள்ளும்
அடைபட்டுக் கிடக்கும் எம் அவல நிலையகன்று
சுகமாக நாம் சேர்ந்து மகிழ்ந்திருந்த
சொந்தமண் எமக்குக் கிடைத்திடுமா?

சிவகௌரி - மட்டுவில்.

# மனித மாண்பை முன்னேற்றும் பணியில் சமயங்களுக்கு இடையிலான உரையாடல்

**பாப்பரசரின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் சபை தலைவர் பேராயர் மைக்கல் ஆண்டகை வத்திக்கான் நகரிலிருந்து வெளியிடும் 2003 ஆம் ஆண்டு தீபாவளி பெருவிழாச் செய்தி.**

வத்திக்கான் நகரிலிருந்து இந்து மக்களின் பெருவிழாவான தீபாவளி தினத்திற்கென வெளியிடப்பட்ட செய்தியானது மனித மாண்பை வலியுறுத்துகிறது. மனிதர்கள் அனைவரும் மாண்புடன் வாழ எல்லோரும் இணைந்து செயற்படவேண்டுமென அழைப்பு விடுக்கிறது. எல்லா மனிதர்களினதும் உயர்நிலையான கடவுள் நம்பிக்கையை புதுப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் மற்ற மனிதர்களுடனான உறவுகளை புதுமெருகூட்டவும் சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு, கடவுளால் படைக்கப்பட்ட எமது மனித மாண்பையும் ஒவ்வொரு மனிதரினது மனித மாண்பையும் மீளக் கண்டுபிடிக்கவும் மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும் துணிவுடன் பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கின்றன. தீபாவளிப் பெருவிழாவின்போது சில இந்து மத சகோதரர்கள் குடும்பங்கள் இடையேயும் உறவினர்கள், நண்பர்கள் அயலவரிடையேயும் உறவைக் கட்டியெழுப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறார்கள் என்ற உண்மை என்னை எப்போதும் கவர்ந்துள்ளது. எமது சொந்தக் கிராமங்கள், நகரங்கள், நாடுகள் இடையேயும் பரந்த உலகிலும் இந்துக்களும் கத்தோலிக்கர்களும் இதுபோன்ற முயற்சிகள்மூலம் பரந்த உறவைக் கட்டியெழுப்பவும் நீடித்த சமாதானத்தை வளர்க்கவும் முயலக்கூடாதா? எனக் கேள்வி எழுப்புகிறார். அவரது தீபாவளி தினச் செய்தியின் முழுமையை கீழே நோக்குவோம்.

1. உங்களது மதிப்புக்குரிய சமய சம்பிரதாயங்களின்படி நீங்கள் கொண்டாடும் தீபாவளி பெருவிழாத் தினத்தை முன்னிட்டு இந்த வருடமும் உங்களை வாழ்த்தி உங்களோடு ஒரு சிறிய செய்தியை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். வருடம் முழுவதும் நீங்கள் கொண்டாடிவரும் பல்வேறுபட்ட இந்து சமய பெருவிழாக்களில் இந்த தீபாவளி விழா உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் விசேடமான இடத்தையும் பொருத்தத்தையும் கொண்டுள்ளது என்பது எனக்குத் தெரியும். பழைய கால சம்பிரதாயங்கள் சொல்வதுபோல் சடங்குகளை அர்த்தமுள்ள விதமாகக் கொண்டாட ஒன்றுசேரும் காலம் தீபாவளி பெருவிழாக் காலமாகும் உங்கள் ஒவ்வொருவருக்கும் இவ்விழாவினைக் கொண்டாட இணையும் எல்லாக் குடும்பங்களுக்கும் நான் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

## பாப்பரசரின் பிரதிநிதியின் தீபாவளி தினச் செய்தி

2. எல்லா மனிதர்களினதும் உயர் நிலையான கடவுள் நம்பிக்கையை புதுப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் மற்ற மனிதர்களுடனான உறவு[illegible] மெருகூட்டவும் சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு, கடவுளால் படைக்கப்பட்ட எமது மனித மாண்பையும் ஒவ்வொரு மனிதரினது மனித மாண்பையும் மீளக் கண்டுபிடிக்கவும் மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும் துணிவுடன் பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கின்றன. தீபாவளிப் பெருவிழாவின் போது சில இந்துமத சகோதரர்கள், குடும்பங்கள் இடையேயும் உறவினர்கள், நண்பர்கள், அயலவரிடையேயும் உறவைக்கட்டியெழுப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறார்கள் என்ற உண்மை என்னை எப்போதும் கவர்ந்துள்ளது. எமது சொந்தக் கிராமங்கள், நகரங்கள், நாடுகள் இடையேயும் பரந்த உலகிலும் இந்துக்களும் கத்தோலிக்கர்களும் இதுபோன்ற முயற்சிகள் மூலம் பரந்த உறவைக் கட்டியெழுப்பவும் நீடித்த சமாதானத்தை வளர்க்கவும் முயலக் கூடாதா?

3. கிறிஸ்தவ விசுவாசத்தின் இதயமாக கடவுள் அன்பும் அயலவர் அன்பும் விளங்குகிறது. இந்த அடிப்படை உண்மையை மறைத்துவிட்டால் நான் சமயத் தலைவர் என்ற பெருமையை இழந்துபோய்விடுவேன். உங்கள் இந்துசமய பாரம்பரியங்களும் சம்பிரதாயங்களும் [illegible] கொண்ட அன்பையும் நாம் கடவுள் மீது கொண்ட அன்பையும் மட்டுமல்லாமல் மனிதர்கள் தமக்கிடையே கட்டாயம் வைத்திருக்க வேண்டிய அன்பைப் பற்றியும் திறமையாக பேசவில்லையா? ஒவ்வொரு மனிதரது மாண்பும் எல்லோரையும் படைத்த கடவுளிடமிருந்தே பெறப்படுகிறது. இறை நம்பிக்கையுடைய ஒவ்வொருவரது வாழ்விலும் இந்த மனித மாண்பை வளர்த்து பேணிப் பாதுகாக்கும் பணி தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகிறது. எப்படி ஒளி இருளை மேற்கொள்கிறது? எப்படி நன்மை தீமையை வெற்றிகொள்கிறது? எப்படி மன்னிப்பின் மூலமாக வெறுப்பு அன்புக்கு இடமளிக்கிறது? போன்ற சிந்தனைகள் மூலமாக இந்துசமய பாரம்பரியத்தில் தீபாவளிப் பெருவிழாவானது சிந்தனைக்கு நல்விருந்தளிக்கின்றது.

4. இந்துக்களும் கிறிஸ்தவர்களுமாகிய நாம் ஒவ்வொரு மனிதரது மாண்பை வளர்க்கவும் பாதுகாக்கவும் ஒன்றாக என்ன செய்யலாம்? சமயத்தின் பெயரால் ஒரு மனிதருக்கென்றாலும் குற்றம் இழைக்கப்படும் போது அது அந்த முழு சமய பாரம்பரியத்தையும் துஷபிரயோகம் செய்ததாகாதா? இந்துசமய தர்மமோ கிறிஸ்தவ சமய விசுவாசமோ வெறுப்பையும் மற்றவர்களை மதிக்காத தன்மையையும் போதிக்கவில்லை. சமய நம்பிக்கை உடையவர்களிடம் உள்ள வெறுப்பும் மற்றவர்களை மதிக்காத தன்மையும் அச்சமயத்திற்கும் அது சமுதாயத்தில் வகிக்கும் இடத்திற்கும் அவமதிப்பையே தரும். நாம் ஒவ்வொரு மனிதரது மனித மாண்பை வளர்க்க எவ்வளவிற்கு அதிகமாக எம்மை அர்ப்பணிக்கிறோமோ அவ்வளவிற்கு அதிகமாக எமது சமய சம்பிரதாயங்கள் மற்றவர் கண்களில் நன்மதிப்பைப் பெறும்.

**அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

5. இதை நாம் எவ்வாறு அடையலாம் என்பது பற்றிய உங்கள் கருத்துக்கள் நல்வரவேற்பை பெறும். அவை பாப்பரசரின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் சபைக்கோ அல்லது பல்வேறு சமய பாரம்பரியங்களுக்கிடையிலான உறவு பற்றிய பாப்பரசரின் அலுவலகத்திற்கோ அல்லது உங்கள் பிரதேச கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்கள் உறுப்பினர்களுக்கோ நேரடியாக அனுப்பப்படலாம். ஒவ்வொருவரும் கவனமாகச் செவிசாய்ப்பதன் மூலம் எமது பொதுவான நோக்கங்களை பகிர ஒன்றிணைவோம். உலகிலுள்ள இன்றைய சமகால பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமது பொறுப்பை உணர்ந்து தெரிவுகளை மேற்கொள்ள நேர்மையாக பேசுவோம்.

6. அன்பான இந்துசமய நண்பர்களே! நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் நண்பர்களும் உங்கள் மத்தியில் உள்ள அறிமுகம் இல்லாதவர்களும்கூட மகிழ்வையும் சமாதானத்தையும் தீபாவளி தின ஒளியையும் தீபாவளி குறித்து நிற்கும் எண்ண முடியாத ஒளிப்பிளம்புகளையும் அனுபவியுங்கள். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானையில் தாமோதரம் வீதிக்கு, சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில், பொற் கொல்லர் வீதியில் 11பரப்பு 10குளி காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நதி கனகசபை, C/o சறா தாமோதரம், தமோதரம்பிள்ளை வீதி, சங்கத தானை. (23988)

### O/L கணிதம்

ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகு களும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புகளும் A,B பெறுபேறடை வதற்காக 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் தொடர்பு: க.ஆறு முகநாதன், இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (23986)

### திருமண சேவை

1968, ஆயிலியம் பாதம் 18, படித்த, Norway மணமகனுக்கு அழகிய, மெல்லிய, 30 வயதிற்கு உட்பட்ட மண மகள் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும். துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (23871)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்தவரும் செவ்வாய்க்குற்ற முள்ள, கிரகபாவம் குறைந்த, கனடா வில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள, 35வயது உடையவருமான மணமக னுக்கு அழகிய, மெல்லிய மண மகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2080, C/o உதயன், யாழ்ப் பாணம். (23928)

### தவறிவிட்டது

சங்கானை, பிளாக் வீதிக்கும் கட்டுடைக்குமிடையில் 22-10-2003 அன்று தங்கச்சங்கிலி ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து T.P. 222 2104 உடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங் கப்படும். (24003)

### வீடற்றவன் நாவல்

O/L மாணவர்களே! வீடற்றவன் நாவலுக்கு விளக்கமும் விமர்சனமும் எழுதியிருக்கிறார் ஆராலியூர் ந.சுந்தரம் பிள்ளை. ரூபா 25. நேரில் வந்தால் 20% கழிவுடன் துரலாய் 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ். (23968)

### மேல்வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதி யில் இலக்கம் 46இல் அமைந்திருக் கும் இரண்டு பரப்பு காணியுடன் கூடிய மேல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.சுந்தரலிங்கம் ஒப்பந்தக்காரர், 39/5, புதுவீதி, கொய்யாத்தோட்டம். (சி-30957)

### மலிவு விற்பனை

மில்க்வைற் சோப் 6/= ரூபா விற்கு மொத்தமாக விற்பனை வாகனத்திலும் தொழிற்சாலை யிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்
த.பெ.இல.77,
யாழ்ப்பாணம். (சி.30989)

## நெடுந்தீவு படகுச் சேவை நேரங்களில் மாற்றம்

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கப் படகு கள் சேவையில் ஈடுபடும் நேரங்களில் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் எஸ். கோபால சிங்கம் தெரிவித்தார்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலையில் நெடுந்தீவிலிருந்து புறப் படும் சங்கப்படகு குறிகாட்டுவானில் இருந்து மீண்டும் நெடுந்தீவுக்கு காலை 10 மணிக்கு புறப்படும்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளி லும் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டு வானுக்குப் புறப்படும் படகு பி.ப. 2.30 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பிக் கும். திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் மட்டுமே பயண ஒழுங்கு கள் முன்சொன்ன நேரத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் ஏனைய தினங்களில் வழமைபோன்றே சேவை கள் அமையும் எனவும் சங்கத் தலை வர் மேலும் தெரிவித்தார். (ம-11)

## நீர் வளங்களின் அபிவிருத்தி பற்றி 28 ஆம் திகதி செயலகத்தில் மாநாடு

யாழ். குடாநாட்டில் நீர் வளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான முக் கிய ஆய்வரங்கு 28ஆம் திகதி காலை 9 மணிமுதல் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டு நன்னீராக்கல் திட்டத்தின் ஒருபகுதியான தொண்ட மனாறு உவர்நீர்த் தடுப்பு அணைத் திட்டத்தின் தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்து, தொடர் நடவடிக்கை களின் முன் மொழிவுகளை இனங்காண் பதற்கான குறுகியகால ஆய்வொன் றினைச் செய்ய உலக வங்கி சிபார்சு செய்துள்ளது.

அவ்வாய்விற்கான விடயங்களினை வரையறை செய்வதற்கு ஏதுவாக இத் திட்டத்தின் பங்காளிகளினதும், சமூகத தினதும், நிபுணர்களினதும் ஆலோச னைகள் பெறப்படவுள்ளன.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதியின் கிராமசேவையாளர்கள் அத் துறைசார்ந்த நிபுணர்கள் அனைவரை யும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்ம நாதன் கேட்டுள்ளார். (ம-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 05 - 1958

மறைவு 03 - 12 - 2002

அமரர் **தர்மலிங்கம் இரவீந்திரன்**

(முன்னாள் மின்னிணைப்பு பகுதி ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

திதி: 24.10.2003

**ஓராண்டு கடந்தாலும் உன் நினைவுகள் என்றும் எங்களைவிட்டு அகலாது.**

க.தர்மலிங்கம்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

என்றும் உன்நினைவோடு வாழும்:
தந்தை, தாய், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

(23996)

## முதலாம் ஆண்டு நினைவுகளில்...



தோற்றம் 28 - 05 - 1945

மறைவு 03 - 11 - 2002

அமரர் **சின்னத்துரை சச்சிதானந்தம்**

திதி: 24-10-2003

**ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சில் அழியாது உங்கள் நினைவுகள்.**

கோகுல வீதி,
கோண்டாவில்.

- பிள்ளைகள்.

(23998)(19-21-15-)

## 14 ஆவது ஆண்டு நினைவு கூரல்



மண்ணுலகு 21 - 09 - 1915

விண்ணுலகு 28 - 10 - 1989

கைதடி நாவற்குழியூர்

அமரர் **ஏரம்பு செல்லத்துரை**

திதி: 24.10.2003 (சதுர்த்தசி)

எங்கள் ஐயாவே!
எம் ஆருயிர்ச் செல்வமே!
நீ சென்று பதினான்கு ஆண்டுகள்
பறந்தோடி விட்டதையா
உன் பழமொழிகள், உன்
பாட்டுக்கள் என் நெஞ்சை
விட்டகலாதே ஐயா!
எத்தனை சோதனை ஐயா!
எத்தனை வேதனை ஐயா!
நீ இருந்திருந்தால் ஒன்றுமே
இல்லையையா, பறுவதம் பறுவதம் என்ற
உன் வார்த்தை எங்கே ஐயா?

கைதடி. நாவற்குழி தெற்கு.

என்றும் உன் நினைவில் வாடும்:
மகள் பரமேஸ்வரி.

(24004) (34-21-19-15)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!



**ராஜா கிறீம் ஹவுஸ்**

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது கிளையினை சென்ற திங்கள் முதல் (20.10.2003) 195/5, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல் வேலியிலும் ஆரம்பித்துள்ளோம்.

அங்கும்.......
❖ சுவைமிகு ஐஸ்கிறீம் வகைகள் ❖ சிற்றுண்டி வகைகள்
❖ குளிர்பானங்கள் மற்றும்
எமது வழமையான விற்பனைகள் - யாவும் பெற்றுக்கொள்ள
"திருநெல்வேலியிலும் எமது கிளை"
"தீபாவளி திருநாளை ராஜாவுடன் கொண்டாடுவோம்"

(34-21-15-19) (24006)



**சொலெக்ஸின் ஒளிதரும் தீபாவளித் திருநாள் நல் வாழ்த்துக்கள்!**

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

▲ உங்கள் கண்களைப் பரிசோதித்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முதல்தர பிறேம்களில் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும்.
▲ காலநிலைக்கேற்ப கலர் மாறக்கூடிய சண்கிளாஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
▲ பவர் மேசைத் தொலைபேசிகள் - சிம்காட், கிற்காட், மொபிற்றல் காட் வகைகள் பெற்றுக்கொள்ளவும்.
▲ சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.

நாடுங்கள்: **சொலெக்ஸ் மூக்குக்கண்ணாடியகம்**
கண்டி வீதி, சாவகச்சேரி சந்தி, சாவகச்சேரி.

குறிப்பு:
எமது தலைமையகம் மிகவிரைவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி முன்பாக ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

(21-15-19-26) (C/30905)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் இராசரத்தினம்

(பேப்பர் இராசா) சங்கானை

தேவாலய வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசரத்தினம் 23.10.2003 வியாழக்கிழமை அதிகாலை 2.00 மணிக்கு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஸ்ரீபூலக்சுமி (இராசாத்தி)யின் அன்புக் கணவரும் மீரா (ஜேர்மனி), ஜெயகாந்தன் (பிரான்ஸ்), ஜெயதாரணி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானாந்தன், ஞானசௌந்தரி, கிருபாகரன்( பொறுப்பதிகாரி, வலி.மேற்குப் பிரதேச சபை உப அலுவலகம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலக்ஷன், சுலக்ஷன், பவித்திரா, ஜெயக்சன், ஜெயநிக்ஷன், நெல்சன், விதுஷா, மகீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.10.2003 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக, சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச்செல்லப் பட்டது.

இந்த அறிவத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை. (சி/30761)(21-35-15-19)

தகவல்:
து.கிருபாகரன் (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால நிர்வாக வரைபை அரசு ஏற்கவேண்டும் இல்லையேல் பிரிந்துசெல்ல சர்வதேச சமூகம் உதவும்

## கல்விக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் உரை

தெல்லிப்பழை,ஒக்.24

இடைக்கால நிர்வாக வரைபை அரசு ஏற்கவேண்டும் இல்லையேல் பிரிந்து சென்று தனித்து வாழ சர்வதேச சமூகமே எமக்குக் கைகொடுக்கும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கான விசேட சந்திப்பில் உரையாற்றிய தமிழீழக் கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து 18 மாதங்களாகின்றன. ஏ - 9 பாதை திறக்கப்பட்டதைத் தவிர இவ்வொப்பந்தம் இன்னும் எதனையும் சாதிக்கவில்லை. மக்களின் இயல்பு வாழ்விற்கான எந்த விட்டுக் கொடுப்பையும் அரச படைகள் மேற்கொள்ளத் தயாரில்லை சமீபத்தில் யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் இதை பிரதிபலித்துள்ளார்.

யாழ். வலயத்திலும் வலிகாமம் வலயத்திலும் 70 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயங்களால் விழுங்கப்பட்டு இயங்கமுடியாத நிலையில் உள்ளன. இவற்றில் ஏதேனும் எஞ்சியுள்ளனவா என்று கூட எமக்குத் தெரியாது. 60 பாடசாலைகள் இராணுவ முட்கம்பிகளுக்கு நடுவில் சுயமாக - சுதந்திரமாக - செயற்படமுடியாமல் இயங்குகின்றன. வலிகாமம் வடக்கில் தென்மராட்சியில் வளம் மிக்க விவசாய நிலங்கள் விவசாயம் செய்யமுடியாத நிலையில் பறிகப்பட்டிருக்கிறன.

குடாநாட்டிலுள்ள 54 மீன்பிடி இறங்குதுறைகளில் 20 இறங்குதுறைகள் மட்டுமே பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றையும் அதிகாலைக்கு பின்பே பயன்படுத்த முடியும்.

படிப்படியாக மக்களுக்கு இயல்பு வாழ்வைப் பெற்றுக்கொடுக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் நாம் இதுவரை 6 சுற்றுப் பேச்சுகளில் பங்கு கொண்டோம். ஆனால், இழுத்தடிப்பு நாடகங்களே அரசால் அரங்கேற்றப்பட்டன. இதனாலேயே நாம் பேச்சுகளிலிருந்து இடையில் விலகினோம்.

அரசினால் எமது பிரதிநிதிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பு ஒரு சட்ட வலுவற்ற அமைப்பாகவே இருந்தது. இந்நிறுவனத்தால் எமது மக்களின் நலன்களை மேம்படுத்தக் கூடியவாறு திட்டங்களைச் செயற்படுத்த முடியவில்லை. மாறாக ஜனாதிபதியால் கலைக்கப்படக் கூடிய ஓர் அமைப்பாகவே இது இருந்தது.

எமது மக்களிற்கென இந்நிறுவனத்தினூடாக வரும் நிதி, நிறுவனம் கலைக்கப்பட்டால் அரசு திறைசேரிக்கு சென்று சேரக்கூடிய ஆபத்தும் இருந்தது. இதனாலேயே நாம் இவ்வமைப்பிலிருந்தும் விலகினோம்.

ஒஸ்லோ மாநாட்டில் வடக்கு - கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கென அரசினால் பெறப்பட்ட நிதி வடக்கு - கிழக்கில் செலவிடப்பட்டது. ஆனால், அது அல்லற்பட்ட தமிழர்களுக்கு செலவிடப்படவில்லை. 'ஓயாத அலைகள்-3 படை நடவடிக்கையால் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட சிங்கள நில ஆக்கிரமிப்பாளர்களை மீண்டும் மணலாறு, சேருவில பகுதிகளிலுள்ள தமிழர் நிலங்களில் குடியேற்றவே இந்த நிதி பயன்படுத்தப்பட்டது.

இவற்றினாலேயே நாம் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. நாம் கலந்துகொண்டிருந்தால் அரசுக்கு அதிக நிதி கிடைத்திருக்கும். ஆனால், அது எமது மக்களை சென்றடைந்திருக்காது.

எனவேதான், எமது மக்களின் வாழ்வை நாமே சீர்படுத்தக்கூடிய அதிகாரத்தை எமக்குத் தரக்கூடிய இடைக்கால நிர்வாக சபை ஒன்றிற்கான வரைபை சர்வதேச மற்றும் தமிழீழ சட்ட, அரசியல் வல்லுநர்களின் உதவியோடு தயாரித்து அதை அரசிடம் தற்போது முன் வைக்கவுள்ளோம்.

அரசு அதை ஏற்றுக்கொண்டால் பிரச்சினையில்லை. இல்லையெனில் நாம் பிரிந்துசென்று தனியாட்சி அமைப்பது தவிர்க்கவியலாததாகிவிடும். இதை எந்த வல்லரசும் தடுக்க முடியாது. ஏனெனில், ஐ.நாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட - சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட - தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைச் சட்டத்திற்கு அமைவாகவே நாம் இடைக்கால வரைபை அமைத்துள்ளோம்.

இச்சட்டத்தின் பிரகாரம் ஒரு தேசிய இனம், அவ்வினம் வாழும் நாட்டின் அரசிடம் இருந்து தமக்கான பூரண கௌரவத்தையும் பாதுகாப்பையும் பெறமுடியாதவிடத்து பிரிந்து சென்று தனியரசமைக்க முடியும். இன்று சர்வதேச சமூகம் எமக்கு ஆதரவு தந்து நிற்கிறது. எம்மை பயங்கரவாதிகள் எனக் கூறியோர் எல்லாம் இன்று எம்மை சந்தித்துப் பேசுகின்றனர். எமது தார்மீகக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகையால், முரண்பட்ட கருத்துகள் இன்று யாழ்ப்பாண சமூகத்தில் உலாவுகின்ற நிலையில் ஆசிரியர்களாகிய நீங்கள் சரியான - தெளிவான - கருத்துக்களை கூறுங்கள் - என்றார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜும் உடனிருந்தார்.

(ம-150)

## போராட்டத்தை விஸ்தரிக்க பகுதிநேர ஆசிரியர்கள் முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.24

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாததைக் கண்டித்து பெரிய அளவில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு - விஸ்தரிப்பதற்கு - பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மேற்படி சங்கம் கூட்டங்களை மாவட்டங்கள் தோறும் நடத்திவருகின்றது.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களில் தகுதியானவர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதை வலிவுறுத்தி மேற்படி சங்கப் பிரதிநிதிகள் திருமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு அலுவலகத்திற்கு முன்பாக தொடர்ந்தும் 26 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் இக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(எ-8)

## நீதிமன்ற ஊழியர்களுக்கு கொழும்பில் கணனிப் பயிற்சி

வலி.வடக்கு,ஒக்.24

யாழ். குடாநாட்டு நீதிமன்றங்களின செயறபாட்டைக் கணனி மயப்படுத்துவதற்கு முன்னோடியாக நீதிமன்றங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு கணனிப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் இருந்து தலா இரு ஊழியர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதிமுதல் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு இப்பயிற்சி கொழும்பில் உள்ள நீதிபதிகளுக்கான பயிற்சி நிலையத்தில் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஊழியர்கள் இப்பயிற்சியைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கையை நீதிச் சேவைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

(ஒ-86)

## சித்தன்கேணி நாககன்னி ஆலயத்தில் ரூ.2 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டு

சங்கானை,ஒக்.24

சித்தன்கேணி நாககன்னி அம்பாள் ஆலயத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் உண்டியலில் இருந்த பணமும் கடந்த திங்கட்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளன.

அனறையதினம் நள்ளிரவு வேளையில் மழை பெய்துகொண்டிந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. ஆயினும், சத்தம் கேட்டு ஆலய பூசகர் வந்து பார்த்த போது தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொட்டுத்தாலி, சங்கிலி, ஆலய பாவனைப்பொருள்கள் மற்றும் 20 ஆயிரம் ரூபா பணம் என்பனவே திருடப்பட்டுள்ளதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-10-29)

## கசூரினா கடற்கரைக்கு வருவோரினது எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

### உதவி அரச அதிபர் தெரிவிப்பு

காரைநகர்,ஒக்.24

யாழ். குடாநாட்டில் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்கள் பல உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அகப்பட்டிருப்பதால் தற்போது காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வருவோரின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம்.

காரைநகர் கசூரினா பீச்சில் உல்லாசப்பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி அதனை ஆரம்பித்து வைக்கும் விழா கடந்த திங்கட்கிழமை காரைநகர் வர்த்தக சங்கத் தலைவர் வே.சிற்சபேசன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சாம்பசிவம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இதுவரை காலமும் ஈழத்துச் சிதம்பர புண்ணிய தீர்த்தக் கரையிலேயே மது அருந்துதல் உட்பட பல கலாசார சீரழிவுகள் இடம்பெற்று வந்தன. இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் உல்லாசப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனுமே ஈழத்துச் சிதம்பர புண்ணிய தீர்த்தக்கரைக்கு அப்பால் உல்லாசப் பிரயாணிகளுக்காக இந்த இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது - என்றார்.

இந்த விழாவில் காரைநகர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.சுடர், காரைநகர் தென்னிந்திய திருச்சபை ஆயர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(ம-173)

## யுத்தத்தில் சேதமான வீடுகளுக்கு கூரைத் தகடுகள் வழங்கத் திட்டம்

வலி.வடக்கு,ஒக்.24

யுத்தத்தால் பாதிப்படைந்த வீடுகளுக்கு கூரைத் தகடுகளை வழங்கும் திட்டத்தைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்தவுள்ளது.

குடும்பத் தலைவரை இழந்த, அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களில் பொருளாதார அடிப்படையில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களின் வீடுகளுக்கே கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

ஜப்பானிய அரசின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதில் பயன்பெறத் தகுதியான குடுமபங்களைத் தெரிவுசெய்து தரும்படி பிரதேச செயலர்களிடம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளது.

தொகுதிக்கு 750 வீடுகள் என்ற அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம், தெரிவுசெய்யப்படும் பயனாளிகளின் வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளால் நேரில் பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னரே கூரைத்தகடுகள் வழங்கப்படும் எனறு தெரிவிக்கப்பட்டது.

(ஒ-86)

## குரு மகா சமாதி குருபூசை தினம்

வலி.கிழக்கு,ஒக்.24

யோகர் சுவாமிகளிடம் அருளாசி பெற்ற சிவாய சுப்புரமுனிய சுவாமிகளின் 2 ஆவது குருமகா சமாதி குருபூசை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்ட மண்டபத்தில் தலைவர் திருமதி சி.கனகரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர் சாயி குருசேஸ்திர ஸ்ரீசாயி மாதாவும், கௌரவ விருந்தினராக இந்தியா ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சமயநெறிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெறும்.

(ம-180)

## ஒக்ரோபர் புரட்சி ஆண்டு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

ரஷ்யாவில் 1917 ஆம் ஆண்டு லெனின் தலைமையில் இடம்பெற்ற ஒக்ரோபர் புரட்சியின் 86ஆவது ஆண்டு தினத்தையொட்டிய நிகழ்வு சர்வதேச மாக்சிசக் குழுவால் யாழ். நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ஒ)

## நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.24

தேசிய கல்வி நிறுவகப் பட்டப் பின் படிப்பு கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நாளை சனிக்கிழமை முதல் இரு தினங்கள் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ். மாவட்டம் முழுவதிலுமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் நேர்முகத்தேர்விற்கு தோற்ற முடியும்.

இவர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்களைச் சந்தித்து முறைப்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். - என்று கூறப்பட்டது.(எ)



வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கியின் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் முதல் வங்கிக் கணக்கை ஆரம்பிக்கும் போது எடுக்கப்பட்ட படம். *(படம்: வட்டுக்கோட்டை செய்தியாளர்)*

## வாழைத்தோட்ட உரிமையாளருக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை

கோப்பாய்,ஒக்.24

கடந்த மே மாதம் குடாநாட்டில் ஏற்பட்ட மினி சூறாவளியினால் அழிவுற்ற வாழைத்தோட்டங்களின் சொந்தக்காரர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் வடக்கு - மத்தி விவசாய சம்மேளனத்துக்கு சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர இது தொடர்பாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மினி சூறாவளியினால் கோப்பாய் மற்றும் நீர்வேலி பிரதேசங்களில் பெருமளவிலான வாழைமரங்கள் அழிவுற்றமை தொடர்பாக அப்பிரதேச விவசாயிகள் யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு முறையிட்டிருந்தனர். அத்துடன், சமூக சேவைகள் திணைக்களத்துக்கும் அறிவித்திருந்தனர். இதனை அடுத்தே தற்பொழுது நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் செ.தம்பிஐயா தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான வாழைமரங்கள் அழிவடைந்ததை அடுத்து குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக வாழைப்பழத்தின் விலை பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-10-72)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவில் கூடைப்பந்தாட்டப்போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து பாடசாலை மற்றும் கழக அணிகளுக்கிடையே நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை முதல் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில், பாடசாலை மட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியனவும்-

பெண்கள் பிரிவில், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை ஆகியனவும்-

கழக மட்டத்தில் ஆண்கள் பிரிவில், கிறாஸ் கொப்பர்ஸ் வி.க, பற்றீசியன் வி.க, யாழ் பல்கலைக்கழக வி.த., கோப்பாய் ஐக்கிய வி.க., சென்றலைட்ஸ் வி.க. மற்றும் ஜொலிஸ்ரார் வி.க. என்பனவும்-

பெண்கள் பிரிவில், ஆர்.டி.எஸ். வி.க. ஜொலிஸ்ரார் வி.க., அரியாலை ஐக்கிய வி.க, பமிலியன் வி.க. மற்றும் யுத்கார்மல் வி.க. என்பனவும் - பங்கு பற்றுகின்றன. (ஒ-5)

## வலைபந்தாட்டம்

இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நாளையும், நாளைமறுதினமும் அநுராதபுரத்தில் நடைபெறும் வலைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து இரண்டு அணிகள் பங்குபற்றவுள்ளன.

பெண்வீராங்கனைகளைத் தனியே கொண்ட ஓர் அணியும், பெண், ஆண் வீரர்கள் இணைந்த ஓர் அணியும் இப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. இம்முறை முதல்தடவையாக ஆண், பெண் வீரர்கள் இணைந்த அணியொன்று யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்கு பற்றுகிறது.

அநுராதபுரம் பொது மைதானத்தில நடைபெறும் இப்போட்டியில் பங்கு பற்றவென யாழ்.மாவட்ட அணிகள் இரண்டும் இன்று புறப்படுகின்றன. (ஒ-8)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஒக்.24

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

14,16,18,20 வயதுப்பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.24

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் முடமாவடி ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி ஜெயமாலினி தங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் கலந்து கொள்வார்.(ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.24

தீபாவளி தினத்தை முன்னிட்டு கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுக் கழகத் தலைவர் டி.தயாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோனாதிராசா கலந்துகொள்வார். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.24

சுன்னாகம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடத்திய நட்சத்திரங்களின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுளளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் ஆ.சி. நடராசா கலந்துகொள்வார்.

இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு:-

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக கல்லூரியும்-

இறுதி ஆட்டத்தில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதவுள்ளன. (ஒ-5-86-152)


# கம்ப்யூட்டர் உலகம்

இலங்கையின் முழுமையான தமிழ் கணினி மாத சஞ்சிகை

22-1/3,Galle Road, Dehiwala.

வரும் இதழிலிருந்து புதிய தொடர்கள் ஆரம்பம்

★ கணினி அறிமுகம்(புதியவர்களுக்கானது) ★ MS Office ★Computer Programming ★ HTML (எச்ரீஎம்எல்)
★ Virus(வைரஸ்) ★ இணையம்(Internet) ★ Page Maker(பேச் மேக்கர்) ★ Flash ★ASP(ஏஎஸ்பீ) ★ Database

வரும் இதழின் சிறப்புக் கட்டுரை : OCR

**இன்னும் ஏராளமான கட்டுரைகள், துணுக்குகள், போட்டிகள், கேள்வி பதில்கள்.**
**இன்றே சந்தாதாரராகுங்கள் : தனி இதழ் ரூபா 30/= வருட சந்தா ரூபா 300/= மட்டும்.**

**கம்ப்யூட்டர் உலகம்** மாத சஞ்சிகையின் வெளியீடுகள்

முழுமையான கணினி வழிகாட்டி
COMPLETE COMPUTER GUIDE ரூபா 250/=
சிறு வழிகாட்டி நூல்கள்:

| | | | |
|---|---|---|---|
| ❑MS WORD | ரூ.40/= | ❑ MS EXCEL | ரூ.40/= |
| ❑MS ACCESS | ரூ.50/= | ❑ POWER POINT | ரூ.40/= |
| ❑கணனி அறிமுகம் | ரூ.40/= | ❑ இண்டர் நெட் | ரூ.40/= |
| ❑HTML | ரூ.40/= | ❑ HARDWARE | ரூ.50/= |
| ❑JAVA SCRIPT | ரூ.50/= | ❑ VB SCRIPT | ரூ.50/= |
| ❑ASP | ரூ.80/= | ❑ FLASH | ரூ.50/= |

**200 இற்குமேல் பெறவிரும்பும் கணினி கல்வி நிறுவனங்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் பெயரில் சலுகைவிலையில் செய்து தரப்படும்.**

(C/30994) (25-12-16-29)

சந்தா மற்றும் வேண்டுகைப் படிவம்

❑ 12 மாத கம்ப்யூட்டர் உலகம் சஞ்சிகை ரூ. 300/=
❑ முழுமையான கணினி வழிகாட்டி ரூ. 250/=

| | | | |
|---|---|---|---|
| ❑MS WORD | ரூ.40/= | ❑ MS EXCEL | ரூ.40/= |
| ❑MS ACCESS | ரூ.50/= | ❑ POWER POINT | ரூ.40/= |
| ❑கணனி அறிமுகம் | ரூ.40/= | ❑ இண்டர் நெட் | ரூ.40/= |
| ❑HTML | ரூ.40/= | ❑ HARDWARE | ரூ.50/= |
| ❑JAVA SCRIPT | ரூ.50/= | ❑ FLASH | ரூ.50/= |
| ❑VB SCRIPT | ரூ.50/= | ❑ ASP | ரூ.80/= |

பெயர் : ..............................................
முகவரி : ..............................................

காசுக்கட்டளையை "COMPUTER ULAGAM" என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாய் எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:

**COMPUTER ULAGAM,**
22-1/3, Galle Road, Dehiwala.


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டடம் அமைப்பதற்கான கேள்விகோரல்

யாழ். மாவட்டத்திற்கான வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டடம் ஒன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிர்மாணிக்க தகுதிவாய்ந்த (ICTAD -M8) ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவத்தினையும் வரைபடத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாள்களில் முற்பகல் 10.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 1000.00 உடன் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா 15000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்வி விண்ணப்பப்படிவத்தினை தபாலுறையில் சீல் முத்திரையிட்டு *'அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்'* என விலாசமிட்டு மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் *'வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டடம் அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பம்'* எனக் குறிப்பிட்டு 31-10-2003ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் பிரதம கணக்காளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(C/30990) (29-11-16)





# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2098237 இருந்து
2116985 வரை
சீட்டிழுப்பு இல. 1446
திகதி 22.10.2003

**வெற்றி எண்கள்**

**04 06 15 46 54**

போனஸ் எண் **02**

**ஜக்பொட் பரிசு**

**ரூபா.2,422,500/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,422,500/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 129 | 10,000/- | 1,290,000/- |
| 3 | 5,976 | 500/- | 2,988,000/- |
| 2 | 98,956 | 20/- | 1,979,120/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 121,027 | 10/- | 1,210,270/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,467,390/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.3,358,550/-**

தொடர் இல. 3074915க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 25ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2098410-6-10
2103508-2-09
2105994-8-17
2108235-9-27
2113614-4-05

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# கண்ணீர் அஞ்சலி

யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க.வித்தியாலயம் தரம் 1 மாணவனான

## செல்வன் ஜெயக்குமார் வசந்தகுமார்

**21.10.2003 அன்று அகால மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலயம், ஊர்காவற்றுறை. (24015) (25-29-11-16)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தன் சுந்தரலிங்கம்

நொத்தாரிஸ் தோட்டம், கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் சுந்தரலிங்கம் 22.10.2003 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நொத்தாரிஸ் தோட்டம்,*
*கரணவாய் மேற்கு,*
*கரணவாய்.* (24020) (29-11-16)

தகவல்:
வேலுப்பிள்ளை (சகோதரன்)

## இராமமூர்த்தி கனகாம்பிகை

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமமூர்த்தி கனகாம்பிகை நேற்று (23.10.2003) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - பூமணியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - திலகவதியின் மருமகளும் து.இராமமூர்த்தியின் அன்பு மனைவியும் சிவதர்சினி, பிரபாஞ்ஜினி, நந்தகோபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌரி, உதயகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ம.பிரகலாதனின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவநாதன இரத்தினேஸ்வரி, து.கிருபாமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2003) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனகாம்பிகை வாசா,*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.* (24016) (34-29-11-16)

தகவல்:
து.இராமமூர்த்தி (கணவர்)
(ஆலய அலங்கரிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு – நுவரெலியா இடையே உள்ளூர் கடல் விமான சேவை!

## நாளை வெள்ளோட்டம்

கொழும்பு,ஒக்.24

கொழும்பில் இருந்து நுவரெலியாவிற்கு உள்ளூர் கடல் விமான சேவையை ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் நடத்தவுள்ளது.

நீர்நிலைகளில் தரையிறங்கும் கடல் விமானம் (Sea Plane) மூலம் இந்த சேவை நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனமும், நுவரெலியா நகரசபை ஆகியன இணைந்து இந்த விமான சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன. இந்த திட்டத்திற்கென 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் உள்ள கிரகேரி வாவியிலேயே விமானம் தரையிறக்கப்படும். பயணிகளுக்கு விமானத்தில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் வசதியாக அங்கு இறங்குதுறை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை இந்தத் திட்டம் பரீட்சார்த்தமாக நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# புலிகள் ஏற்கும் இடைக்கால நிர்வாகம் பூரண அதிகாரம் கொண்டிருக்க வேண்டும்!

## தலைவர் பிரபாவுக்கு கூட்டுறவு ஊழியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

விடுதலைப் புலிகள் ஏற்கக் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு பூரண அதிகாரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், விடுதலைப் புலிகளின தலைவர் வே.பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர்நிறுத்த உடன்படிக்கையானது வடக்கு - கிழக்கில் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்குவதையே அடிநாதமாக கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா பேரினவாதத்தின் விடாப்பிடியான இனவெறிப்போக்கினால் அல்லலுற்ற எமது மக்கள் போர்நிறுத்தம் மீதும், தொடர்ந்த சமாதானத்திற்கான பேச்சு முயற்சிகளிலும் பெரும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் கொண்டிருந்தனர். ஆனால், மீள்குடியமர்வும் புனர்வாழ்வுக்குமான செயற்பாடுகள் எதுவுமே காத்திரமாக முன்னெடுக்கப்படாத நிலையில் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாயினர்.

சமாதான முன்முயற்சிகளில் முதன்மையானதும் தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய மக்களின் மீள்குடியமர்வும் இயல்பு நிலைக்குத் திரும்புவதும் கானல் நீராகிவிடலாம் என்ற கவலையே மிஞ்சி உள்ளது. மேலும் எமது இனம் காலங்காலமாக ஏமாற்றப்பட்டே வந்துள்ளது; ஏமாற்றப்பட்டே வந்துள்ளது.

ஆகவே, விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, சட்டம், நிதி, காணி, பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் பூரண அதிகாரம் படைத்ததாக விளங்க வேண்டும். இந்த அதிகாரங்கள் மூலமாகவே புனர்வாழ்வு, புனர்நிர்மாண, மீள்குடியமர்வு நடவடிக்கைகளை தங்கு தடையின்றி மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தங்களது தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே எமது அபிலாசையாகும் - என்றுள்ளது. (ஒ)

## இலங்கையும் இந்தியாவும்

# பாதுகாப்பு ஒப்பந்தம் இல்லாமலேயே புரிந்துணர்வுடன் செயற்பட முடியும்

## பாதுகாப்பு விவகார ஆய்வாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.24

இந்தியா - இலங்கைக்கு இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் இல்லாமலேயே இரு நாடுகளும் பாதுகாப்பு விடயங்களில் புரிந்துணர்வுடன் செயற்பட முடியும் என்று இந்தியப் பாதுகாப்பு விவகாரப் பகுப்பாய்வாளர் கே.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய - இலங்கைத் தலைவர்கள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் எனக் கருதுவது தொடர்பாக பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒப்பந்தம் இல்லாமலேயே இலங்கையும் - இந்தியாவும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுடன் மாத்திரமே இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்துள்ளது.

இதன் மூலம் இந்தியா மேற்படி நாடுகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுத்துள்ளது. இலங்கைக்கு இந்தியப் படைகள் சென்று திரும்பியது திருப்திகரமானதல்ல. ஆகவே, இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் அவசியமா எனக் கருதப்படுகிறது- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய தென் பிராந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் தொடர்பாக அவர் கூறுகையில்:-

1987 இலிருந்து 1990 வரை இந்திய தென்பிராந்திய இராணுவத்தினர் இலங்கையில் நிலை கொண்டிருந்தனர். அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் இந்திய இராணுவம் முக்கிய பங்கு வகித்தது.

ஆகவே, இப்போது இலங்கை நிலைவரம் குறித்து அவதானமாக இருக்க வேண்டிய பொறுப்பு இந்திய தென்பிராந்திய இராணுவத்துக்கு இருக்கிறது. இதனால். இன்றைய காலகட்டத்தில் இந்திய தென் பிராந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் முக்கியமானது என்று கூறினார். (எ)

### குரு பூசை

யோகர்சுவாமிகளிடம் அருளாசி பெற்ற சிவாயசுப்புரமுனிய சுவாமிகளின் 2ஆவது குருமகா சமாதி குரு பூசை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் தெற்கில் உள்ள ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் நடைபெறவுள்ளது. திருமதி சி.கனகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் நற்சிந்தனை, பஜனை, கருத்துரை என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ)

### இலவச மருத்துவமுகாம்

யாழ். அடைக்கல அன்னை திருஇருதய சபை அனுசரணையுடன் நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த கண் பரிசோதனை முகாமில் கொழும்பில் இருந்து வரும் மருத்துவ நிபுணர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ-5)

### கூட்டணியின் ஒற்றுமையை வலியுறுத்தி பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக்.24

தமிழர் விடுதலைக் கூட்டணியின ஒற்றுமையை வலியுறுத்தி அமைதிப் பிரார்த்தனை எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள தந்தை செல்வா அகத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டணியின் நிர்வாகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ந.ரவிராஜ் இந்தப் பிரார்த்தனையை ஏற்பாடு செய்துள்ளார்.

தந்தை செல்வாவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய பின் பிரார்த்தனை மற்றும் கருத்தரங்கும் இடம்பெறவிருக்கின்றன. (எ-3-5)

# வன்னியில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு வேறு மாவட்டத்தினரை நியமிக்கலாமா?

## பிரதமர் கவனத்திற்கு அடைக்கலநாதன்

மன்னார்,ஒக்.24

வன்னி மாவட்ட அரச திணைக்களங்கள், வங்கிகளுக்காகிய வெற்றிடங்களை வேறு மாவட்டத்தவரைக் கொண்டு நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.அடைக்கலநாதன் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

மேற்படி விடயம் தொடர்பாக வன்னித் தேர்தல் தொகுதியின் மிகவும் பின்தங்கிய இளஞர்கள் பலரினால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவற்றைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஆட்சேர்ப்புக்கான மாகாண மட்டப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் படிப்பதற்கு எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் மற்றைய முன்னேறிய மாவட்ட பரீட்சார்த்திகளிலும் பார்க்க இவர்கள் குறைந்த புள்ளிகளையே, மாகாண மட்ட பரீட்சைகளிலும், தேசிய மட்ட பரீட்சைகளிலும் பெறமுடியும்.

மத்திய அரசு திணைக்களங்களுக்கு எழுதுநர் பரீட்சை போன்ற ஒரு சிலவற்றிற்கு மாவட்ட மட்டத்தில் வெட்டுப்புள்ளி கணிக்கப்பட்டு ஆள்சேர்ப்பு நடைபெறுகிறது. ஆனால், பலவற்றுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. சிலவற்றுக்கு எவ்வித அறிவித்தலுமின்றி நியமனங்கள் நடைபெறுகின்றன. அரசியல் செல்வாக்குப் பெற்று பல முன்னேறிய மாவட்ட இளைஞர்கள் பின்தங்கிய வன்னிமாவட்டத்தில் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். இதே நேரத்தில் பட்டம் பெற்ற, ஜி.சீ.ஈ. உயர்தரம் படித்த அநேக வன்னி மாவட்ட இளைஞர்கள் இவர்களை பார்த்துப் பொருமிக்கொண்டிருக்கின்றனர்.

வன்னி மாவட்ட வங்கிகளில் உள்ள வெற்றிடங்கள், வன்னி மாவட்டத்தில் பட்டம் பெற்ற, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடித்த பலர் காத்திருக்க, அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படுவதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

இவ்வருட முற்பகுதியில் மன்னார் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்த வெற்றிடங்களை இம் மாவட்ட இளைஞர்களைக் கொண்டு நிரப்பும்படி வங்கித் தலைவரிடம் கோரி இருந்தேன். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒக்ரோபர் மாதத்தில் நியமனம் வழங்கப்பட்டிருப்பதை அறிந்து கவலையடைகின்றேன்.

மாகாண மட்டத் திணைக்கள வெற்றிடங்களை நிரப்ப பரீட்சைகள் நடத்தப்பட்டு, பலவிதத்திலும் முன்னேறிய மாவட்ட பரீட்சார்த்திகளே வேலைவாய்ப்புப் பெறும் வகையில் மாகாண மாவட்ட வெட்டுப்புள்ளி கணிக்கப்பட்டு, பின்தங்கிய வன்னி மாவட்ட இளைஞர்கள் முன்னேறிய மாவட்ட இளைஞர்களுடன் போட்டி இடமுடியாத நிலை உருவாக்கப்பட்டு, வேலை வாய்ப்பைப் பெற முடியாத நிலை உருவாக்கப்படுகின்றது.

பல வகையிலும் பின்தங்கிய வன்னி மாவட்டம், முன்னேறிய மாவட்டங்களின் தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டுமானால், வன்னி மாவட்ட அரச திணைக்கள வெற்றிடங்கள் இம் மாவட்ட இளைஞர்களைக் கொண்டே நிரப்பப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் தற்போது நடைமுறையில் இருக்கும் பின்தங்கிய மாவட்டங்களிருந்து மாணவர்களை ஆள்சேர்க்கும் முறையை, தாதியர் பயிற்சிக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றிலும் கடைப்பிடிப்பதன் மூலம், பின்தங்கிய மாவட்டங்கள் முன்னணிக்கு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு அடைக்கலநாதன் எம்.பி.குறிப்பிட்டிருக்கிறார். (எ)

### வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.24

பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் 30 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 5மணிக்கு பேரிணையத் தலைவர் த.சிவயோகராஜா தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், விடுதலைப் புலிகளின் பிரமுகர் வேபாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை நிலாந்தன் நிகழ்த்துவார். (எ-10)


**இடம்மாற்றம்**

340, கே.கே.எஸ் றோட்டில் இருந்த புறொயிலர் கோழி, வைக்கோல் விற்பனை நிலையம் தற்போது 118, ஜின்ன சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

(24014)(31) - நிர்வாகி.

**ராஜா** யாழ்ப்பாணம்

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இன்று முதல் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகும்.

சேது புகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த




காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

ஆசனங்களை முன் பதிவு செய்துகொள்ளலாம்.

(C/23904) (30)

**லஷ்சுமி சினிமா** இணுவில்

அனைத்து ரசிகர்களுக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளியை முன்னிட்டு

சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் இன்னும் பலர் நடிப்பில்




4 காட்சிகள் காண்பிக்கப்படும்.

காட்சிநேரம்: 10.30,2.30,6.30,9.30 (பி.நே.)

(23901)(12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளிக் காட்சியாக ஜீவா, ஸ்ரீதேவி நடிக்க

திதிக்குதே (ரீல்ஸ்)

காட்சி நேரம் : 11.00, 2.45,6.00 (பி.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு T.DOX

**லிபேட்டி** அச்சுவேலி

எமது தீபாவளி வெளியீடாக சேரன், ரதி, மணிவண்ணன நடித்த

சொல்ல மறந்த கதை (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே)

(C/30851)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

இன்று முதல் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில்

இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண் நடித்த




காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)

T.P.: 021-222 2917. 060 221 2779.

(C/20905)(12)

**தீபாவளி,பிறந்தநாள் வாழ்த்துக்கள்**



இன்று 24-10-2003 இல் தனது ஐம்பதாவது வயதினைப் பூர்த்திசெய்யும் யா/யூனியன் கல்லூரி அதிபர்

திரு. சு. புண்ணியசீலன்

அவர்களுக்கு பிறந்த நாள், தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவர்களின் வாழ்வு சிறக்கவும், கல்விப்பணி மேலும் உயர்வு பெறவும் மனமார வாழ்த்துகின்றேன்.

யா/ பொன்பரமானந்தர் ம.வி, குரும்பசிட்டி.


(24023) (32-12-16-29)

திரு.சோ.இராமநாதன் (அதிபர்).

வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

வெளிநாட்டு அழைப்புக்கள்....

நிமிடத்துக்கு 8/= மட்டும்



தொலைபேசி உரிமையாளர்களுக்கு நிமிடம் 6/=

**லக்ஷன் கொமினிக்கேஷன்**

60, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

T.P-021-222-3331

(24005) (32-29-12-18)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மீனவர்களின் படகுகள் இரவில் சேதமாக்கப்பட்டன

# பருத்தித்துறை நெருக்கடிக்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.24

பருத்தித்துறை முனைக்கடற்கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை பொதுமக்கள் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட முறுகல் நிலைக்கு சுமுகத்தீர்வை எட்டுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக படையினர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகிய முத்தரப்பினர் இடையிலான சந்திப்பொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்தது. இச்சந்திப்பு நேற்று நண்பகல் 12.30 மணிதொடக்கம் பிற்பகல 3.30 மணிவரை பருத்தித்துறை புனித தோமையார் ஆலய முன்றலில் இடம்பெறறது.

இதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி பெறோஸ், யுத்த நிறுத்தக் கண்காணப்புக் குழுவின் அதிகாரிகள், இராணுவத்தின் 524 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த மேஜர் சம்பக் மற்றும் கட்டன், லெப்டினன்ட் தரத்திலான அதிகாரிகள், பருத்தித்துறை பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் பொறுபதிகாரி, மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் பருத்தித்துறை தேவாலயப் பங்குத்தந்தை இருதயதாஸ் கலந்துகொண்டிருந்தார்.

"பொதுமக்களின் சிவில் நடவடிக்கைகளில் படைத்தரப்பு தலையிடப் போவதில்லை" என்று படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது உறுதி அளித்திருந்தமையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ். அலுவலக இணைப்பாளர் இச்சந்தர்ப்பத்திலேயே படை அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

"நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பழிவாங்கும் நோக்குடன் படையினர் நடந்து கொண்டுள்ளனர். நேற்றுமுனதினம் இரவோடு இரவாக பருத்தித்துறை முனைக்கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த இரு மீன்பிடிப் படகுகளை துப்பாக்கிப பிரயோகம் மூலம் படையினர் சல்லடை போட்டுத்துளைத்து அவற்றை மூழ்கடித்துள்ளனர். மேலும் தலா ஒவ்வொரு விசைப்படகு மற்றும் கட்டுமரம என்பவற்றை இரவோடு இரவாக அறுத்துவிட்டுள்ளனர்" என மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இச்சந்திப்பிலே எடுத்துக்கூறினர்.

பருத்தித்துறை முனைக்கடற்கரையில் தரித்து நின்ற மீனவர்களின் படகுகள் எதனையும் படையினா சேதமாக்கவில்லை எனவும் -

அவற்றை பொதுமக்களே சேதமாக்யதாகவும் - படைத்தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

இதனை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் அடியோடு மறுத்தார்.

"கற்கோவளம் முதல் தொண்டைமனாறு வரையிலான கடற்கரைப் பகுதிகளில் அடிக்கொரு காவலரண் அமைத்துப் படையினர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சாதாரணமாக கடல் தொழிலுக்குச் செல்வோரையே 'பாஸ் கேட்டு படையினர் கெடுபிடி செய்கின்றனர். இந்நிலையில் சாதாரண பொதுமக்கள் அப்பகுதியினுள் எப்படி நுழைந்து படகுகளைச் சேதமாக்க முடியும்?" - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இச்சம்பவம் தொடர்பாக சுமுகமான முடிவெதுவும் எட்டப்படாததனை அடுத்து, மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தனித்தரப்பு விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை - படையினரின் இத்தகைய அடாவடித்தனங்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் -

அதுவரை தாம் கடல்தொழிலுக்கு செல்லப்போவதில்லை எனவும் -

பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த சுமார் நானூறு மீனவ குடும்பங்கள் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேதமாக்கப்பட்ட படகுகளின் பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபாவென மதிப்பிடப்படுகிறது. அறுத்துவிடப்பட்ட விசைப்படகு பொலிகண்டி கடற்பரப்பிலும் கட்டுமரம் முனை வெளிச்சக்கூட்டுச் கடற்பரப்பிலும் இருந்து நேற்றுக காலை மீனவர்களால் மீட்கப்பட்டன.

மேற்படி சேதங்களை யுத்த நிறுதத் கண்காணிப்புக் குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன், தாக்குதல் சம்பவத்தில காயமடைந்தவர்களிடமும் ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இச்சம்பவத்தில் மொத்தம் ஆறுபேர் காயமடைந்துள்ளனர் எனத தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களிடமிருந்து படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட ஒலிப்பதிவு கருவி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலர் முன்னிலையில் சேதமாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் வைத்து நேற்று உரியவரிடம் கையளிக்கப்பட்டது.(எ-9-5-7-10-70-173)

## கராத்தே தந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் ரட்ணசோதிமாஸ்ரர், தமிழீழ விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் ம.பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எழுபத்துநான்கு வயது நிரம்பிய கிராண்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் மட்டக்களப்பு, கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சர்வதேச கராத்தே போட்டிகளில் முதன்முதலில கலந்துகொண்ட தமிழ் மகன் என்ற பெருமைக்குரியவர். யாழ் மண்ணில் கராத்தே கலையை அறிமுகப்படுத்தியவரும் இவரே, பொனி றொபேட்ஸ் சர்வதேச சோட்டோகான் கராத்தே சங்கத்தின் ஜப்பானால் அங்கீகரிக்கப்பட்ட ஏகபிரதிநிதியாக இலங்கையில் இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் இறுதியில் கிராண்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் தமிழீழத்தில் கராத்தே கலையின் வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் தமிழீழ தேசியத் தலைவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி கௌரவவிருதாக ஆறாவது கறுப்புப் பட்டியையும், அதற்கான சான்றிதழையும் தமிழீழ தேசியத் தலைவருக்கு வழங்கிக் கௌரவித்தார். (எ-3)

## விடுதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஹென்ஸ் பிரட்ஸ்கர் அன்று கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் வரைவைக் கையேற்று அன்றைய தினமே அரசிடம் ஒப்படைப்பார். ஆரம்பக்கட்ட நேரடிப் பேச்சுக்களுக்கு புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதனை நோர்வே அனுசரணையாளர்கள் எமக்கு அறிவித்துள்ளனர்.

திருகோணமலைத் துறைமுகத்தை மையமாக வைத்து எதிர்க்கட்சியினர் இந்திய அரசைத் திசை திருப்ப முயன்றனர். ஆனால், இந்தியா நமது பிரதமா மேற்கொள்ளும் சகல சமாதான நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவையும் தருவதாக உறுதி அளித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றும். பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் வெகுவிரைவில் கைச்சாத்திடப்படவுள்ளன. பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைப் பொலீஸ்படை முற்றாக சீரமைக்கப்பட்டு, நவீனமயப்படுத்தப்படும். இந்திய பொலீஸ்துறை இதற்கான பயிற்சிகளை இலங்கை பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கும்.

புலிகளின் அச்சுறுத்தல்கள் இல்லை என்பதையும் அவர்கள் மீண்டும் போர்புரிய விரும்பவில்லை என்பதையும் இந்திய புலனாய்வுத்துறையினரும் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

நிச்சயமாக சமாதானப் பேச்சுக்கள் குழம்பாது. அடுத்த ஆண்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்பது உறுதி.

- இவ்வாறு அவர் கூறினார்.

## பருத்தித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைவர். அங்கு சுமார் ஒருமணி நேரம் வரை மறியலில் ஈடுபடுவர். அங்கு வைத்து வடமராட்சி வடக்கு மீனவா கூட்டுறவு சமாசத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இப்போராட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும்படி வடமராட்சிப் பிரதேச வர்த்தக சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களை வடமராட்சி வடக்கு மீனவர் சமாசம் கோரியுள்ளது. (எ-9-5-7-10-70-173)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்குடனும் செயற்பட வேண்டிய ரெலிவ்ஸனின் செயற்பாடு பெரும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்தி வந்ததாகக் கருதப்படும் புலிகளின் கப்பல் குறித்து புலிகளுக்குத் தகவல் கொடுத்ததன் மூலம் அது பிடிபடுவதைத் தடுத்தமை இந்த வகையில் மிக அண்மையில் நிகழ்ந்த சம்பவமாகும் - என்று ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (எ)

## புத்திரசிகாமணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் குறிப்பாக இந்துக்களின் புனிதநாளான தீபாவளியில் அரசியல் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்த வேண்டாம் என்று பலரையும் போலத் தாமும் கேட்டும் தாம் சார்ந்திருந்த எதிர்க்கட்சியின் தலைவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு கட்சியில் தொடர்ந்து இருப்பது தமிழ் மக்களுக்கு இழுக்கு என்றும், தமது சுயமரியாதைக்கு ஒவ்வாதது என்றும் கூறிவிடடே அவர் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் வரிசைக்குச் சென்று அங்கே ஓர் ஆசனத்தில் அமர்ந்தார்.

ஐ.நா.பொதுச் சபையில் பிரதமர் ரணில், ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததை ஆதரித்துப் பேசியதற்காக அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீது பேசியபோதே, புத்திரசிகாமணி தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திவிட்டு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் வரிசைக்குச் சென்று அமர்ந்து கொண்டார். (எ)

# இங்கு மீண்டும் யுத்தம் மூளுவதை உலக நாடுகள் விரும்பவில்லை

## தீபாவளிதினக் கொண்டாட்டத்தில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.24

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் தோன்றுவதை உலக நாடுகள் விரும்பவில்லை. யுத்தம் நடைபெறும் நாடுகளில் இடம்பெறும் சீரழிவுகளை நாம் தினமும் காண்கிறோம். கிருஷ்ணபகவானின் அவதாரங்களும் உலகில் அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டுபவையாகவே அமைந்திருக்கின்றன. எனவே, யுத்த இருளை அகற்றிய தீபத்திருநாளாக இந்தத் தீபாவளியை இலங்கை மக்கள் கொண்டாடவேண்டும்.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தீபாவளித்தின கொண்டாட்ட வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையில் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துமத தத்துவங்கள் வேரூன்றியுள்ளன. கதிர்காமம், முன்னேஸ்வரம் போன்ற பழைமை வாய்ந்த ஆலயங்களுக்கு இனபேதமின்றி மக்கள் சென்று வழிபாடு செய்கின்றனர்.

சமாதான சூழல் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலானவர்கள் தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளனர். வலிகாமம் போன்ற பகுதிகளில் சமாதான பேச்சுக்களின் முன்னேற்றத்தின்போது படிப்படியாக மக்கள் குடியேற்றப்படுவார்கள்.

வடக்கு-கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் சென்று வாழவேண்டும். சகலருக்கும் சமஅந்தஸ்து உள்ளது. தமிழ்பேசும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என மூன்று மதத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்கின்றனர். சகலருக்கும் பாகுபாடுகளின்றி பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவாச்சாரியார்கள், தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த மருதாசலம் அடிகளார் போன்றோர் கலந்துகொண்டனர். (எ)

## கிண்ணியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்கள் பாதிக்கப்பட்டனர். கிண்ணியாவிலிருந்து திருமலைத் துறைவரை சேவையில் ஈடுபடும் பஸ் போக்குவரத்தும் தடைப்பட்டது.

தமிழ் மக்களின் நடமாட்டம் கிண்ணியாவில் குறைந்து காணப்படுகின்றது. எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலம் இராசம்மா

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் இராசம்மா நேற்று (23-10-2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அருணாச்சலம் - சிதம்பரத்தின் மருமகளும் ராணிஅம்மா(கனடா), அரசரட்ணம் (சிறிவாணி நகை மாளிகை), யோகம்மா, சிற்றம்பலம் (லண்டன்), மகாலிங்கம் (கனடா), கோணேசலிங்கம் (அலங்கார் நகை மாளிகை), இந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சிவபாக்கியம் மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராசா (கனடா), வேதவல்லி (ஓய்வுபெற்ற ஆசிரியை - வேலணை மத்திய கல்லூரி), கந்தவேள் (வர்த்தகர், வவுனியா), குணமணி(லண்டன்), அனுஷா (கனடா), கோகிலநாயகி, சிவம்(சயானி நகை மாளிகை) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23-10-2003) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

375/15, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பொ.கோணேசலிங்கம்
(மகன்)

(24026) (29-12-18)

பிரசன்னா
கணனிக் கல்வி நிலையம்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
❖ Special English Classes
❖ Spoken with Grammer
ஆரம்பம்:
25.10.2003 சனிக்கிழமை மாலை 4.00
(24007) (34-29-12-18)

mini INFOTEL LANKA 2003
யாழ்ப்பாணம்
மாபெரும் கணனிக் கண்காட்சி
இன்று, நாளை, நாளை மறுதினம்
மறக்க முடியாதோர் நிகழ்வு...
தவறவிட முடியாதோர் சந்தர்ப்பம...
தறு தகவல் தொலைக்கண்காட்சி. புதிய தகவல் நுட்ப உலகம் பற்றியதோர் கண்நோக்கினை அளிக்கும்.
தகவல் தொழில் நுட்ப உதவியுடன் என்ன செய்யலாம் என்பதனையும் சகல துறைகளிலும் அது தருகின்ற வரையறையற்ற சந்தர்ப்பங்களையும் கண்காட்சியில் கண்டு கொள்ளலாம்.
அனுமதி
மாணவர் - ரூ 10/-
ஏனையோர் ரூ 20/-
தவறவிடாதீர்கள்!
Official Airline Official Bank Official Sponsors
NSB PC House Solutions intel.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர் - 2003

# அசுரம் அழிந்து ஆனந்தம் பொங்கும் இன்பத் திருநாளாம் தீபாவளி

சைவ மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகையும் ஒன்றாகும். இந்தத் தீபாவளி ஆனந்தமயமான மகிழ்ச்சிக்கும் பேரின்பத்துக்கும் வழிவகுக்கும் ஒரு முக்கிய விழாவாகும். மக்களெல்லோரும் புத்தாடை அணிந்து புதுப்பொலிவோடு தமது சுற்றஞ்சூழ மகிழ்ந்திருந்து இனிப்பான பட்சணங்களை உண்டு மகிழும் பொன்னான நாள் இந்தத் தீபாவளி.

மங்களகரமான இத்தீபாவளிப் பண்டிகை பற்றி ஒரு கதை வழக்கிலிருக்கின்றது.

நரகாசுரன் என்றொரு அசுரன் இருந்தான். அவன் தவவலிமையினால் வரம்பல பெற்று எல்லோரையும் துன்பத்துக்குள்ளாக்கினான். தான் நினைத்தபடி ஆட்சி செலுத்தி மக்களை மாத்திரமன்றித் தேவர்களையும் வருத்தினான். அவனது கொடுமைகளைத் தாங்காது அல்லற்பட்ட அனைவரும் காத்தற் கடவுளாகிய மகாவிஷ்ணுவிடம் முறையிட்டனர்.

அவர்களுடைய முறைப்பாட்டுக்கு செவிசாய்த்த விஷ்ணு மூர்த்தியானவர் நரகாசுரனுடன் போர் தொடுத்தார். அவ்வேளை தமது சக்கராயுதத்தினால் நரகாசுரனைக் கொன்றார். நரகாசுரன் இறக்கும் தறுவாயில் "பிரபுவே! நான் இற்றைநாள் வரைக்கும் எல்லோரையும் சொல்லொணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்படுத்தினேன். நான் செய்த கொடுமையினால் அனைவரும அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர்விட்டனர்.ஆகவே, நான் உயிர்நீத்து இறந்துபட்ட நாளாகிய இன்றைய தினம், மக்களெல்லோரும் தங்கள் துன்பங்களை மறந்து சந்தோஷமாக இருக்கும் நாளாகக் கொண்டாட தாங்கள் அருள்புரிய வேண்டும் சுவாமி!" என்று வேண்டிக் கொண்டான்.

அவ்வாறு அந்த நரகாசுரன் தான் இறக்கும் போது இறைவனிடம் வேண்டிக்கொண்டதனால் விஷ்ணு வானவர் மனமிரங்கி , அவனுக்கு " அப்படியே ஆகட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இந்த நரகாசுரன் இறந்த தினத்தை எல்லோரும் சுபநாளாகக் கருதி மகிழ்ச்சியோடு புத்தாடை புனைந்து சந்தோஷமாகக் கழிக்கவே "தீபாவளி" உதயமாயிற்று.

இந்த நாளில் மக்கள் தீபங்களை வரிசையாக வைத்து ஏற்றி ஒளி வீசிப் பிரகாசிக்கச் செய்து தெய்வ சிந்தனையுடன் வழிபாடியற்றி பொங்கிப்படைத்து மகிழ்வர். சிறுவர் சிறுமியர் தமது சக தோழர்களுடன் விளையாட்டுகள் விளையாடி, சிற்றுண்டி அருந்தி சந்தோஷமாகக் காலங்கழிப்பர். அதிகாலையில் எழுந்து நீராடி புதிய ஆடைகளை அணிந்து கொண்டு ஆலய தரிசனஞ் செய்து தம்முடைய சுற்றத்தவர், இனத்தவர் வீடுகளுக்குச் சென்று உறவு கொண்டாடி மகிழும் நாள்தான் தீபாவளி.

சைவ மக்களாகிய நாம் இந்தத் தீபாவளித் திருநாளில் பழையவற்றை மறந்து சந்தோஷமாக அமைதி கலந்த இன்ப வாழ்வு வாழவேண்டுமென்று பரங்கருணைத் தடங்கடலாகிய இறைவனின் கிருபாகடாட்சத்தை வேண்டிப் பிரார்த்தித்து நிற்போமாக.

**சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

## தமிழரே என்ன சொல்வீர்?

வந்தது ஆண்டில் ஒருநாள்
வசந்தத்தின் இளமைக்காலம்
'தந்தது என்ன?' வென்றால்
தமிழரே என்ன சொல்வீர்?

இன்னுமா பொறுமை காப்பீர்
இனியதோர் உலகு செய்ய
எழுந்திரு தோழனே நீ
இணையிலாக் கலைகள் நெய்ய!

அப்படி படைத்த பின்னே
அற்புத தீப நாளை
வாடிக்கை ஆக்கிக் கொள்வோம்
வாணவேடிக்கை
வைத்துப் பார்ப்போம்!

**விசாலி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர் - 2003


இன்பம் பொங்கும் தீபாவளி நன்னாளில் எமது இனிய நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!

உலகப்புகழ் பெற்ற L.G. ஸ்தாபனத்தாரின் இலத்திரனியல் பொருள்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில்....!



LG
Abans

L.G. குளிரூட்டி Air Conditioner
L.G. Colour TV 20" 21"
L.G. Flatron Colour TV 21"
L.G. Microwave Oven

L.G. சலவை இயந்திரம் (Washing Machine)

L.G. குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerator)

மற்றும் மின்விசிறிகள், மின் அலங்கார விளக்குகள், கிறைண்டர் முதலான அனைத்து மின் உபகரணங்களுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:

JAFFNA Electricals
யாழ்ப்பாண மின்னகம்

141, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 5766

06(94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 2353

ABANS LTD. இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

(C/30721)


## தீபத் திருநாளே! வராதே!

தீபத்திருநாளே! ஈழம் வராதே
செம்மண்ணில் வித்துடல் அலற
வாழ்விடங்களில் அரண்கள் எழ
பாதைகளில் மரண ஓலம் குதற
இறைவனை வழிபட வழித்தடை
கல்விக் கூடமோ சிறைக்கூடம்

நம் வாழ்வோ இருட்டறை
பட்டறிவு உண்டெனில்
தீபத்திருநாளே! வராதே!!
அதர்மம் ஒளிந்து தர்மம் வந்தால்
வா! வரவேற்போம்.

ஆதவன்-கரவெட்டி


மங்களம் நிறைந்த மகிழ்ச்சியான இந்தத் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

786
கே.வி.எஸ். ஹாட்வெயர்ஸ்
ஸ்தாபனத்தாரின்
எலக்றோ பிளேற்றிங்

காலத்தால் அழியாத ஸ்திரம் வாய்ந்தது. அத்துடன் பிரகாசம் மிக்க உறுதியோடு உத்தரவாதத்துடன் பெற்றிட

K.V.S. HARDWARES
123, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/30732)



இத் தீபாவளி நன்னாளில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!



தங்க நகையுலகில்.....
நம்பிக்கை,
நாணயத்துடனான
நித்தியசேவையாலும்
நியாயமான
முறையாலும்
நன்னம்பிக்கை பெற்று,
நகையுலகிலேயே
தனியுலகு படைத்து
நிற்கிறது....

நித்திய கல்யாணி நகை மாளிகை

ஓடருக்கு நகைகள் அசல் 22 கரட்டில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

127, கஸ்தூரியார் வீதி (லிங்கன் கூல்பார் அருகில்), யாழ்ப்பாணம்.

(C/30702)



தீபத்திருநாளான தீபாவளிப் பெருநாளில் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.



அழகுக்கு அழகுதரும் நவநாகரிக ஆடைகளுக்கு நம்பகமான ஸ்தாபனம்:

காவேரி சில்க்ஸ்

இல.48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
☎: 222 2333

அழகுமிக்க காவேரிக்கு விஜயஞ்செய்யுங்கள்!



"மகிழ்ச்சி ததும்பும் மங்களகரமான தீபாவளி நன்னாளில் மகாநதியின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!"

- திருமணப் பட்டுப் புடவைகளுக்கும்
- நவீன ரக ஆடைத்தெரிவுகளுக்கும்
- சிறுவர் சிறுமியர்க்கான சிறந்த உடைகளுக்கும்



இளஞ்சிட்டுகளின்
இதயங்கவர்ந்திடும்
இன்பமயச்
சோலை

இன்றே நாடுங்கள்!

மகாநதி புடைவையகம்

இல.4, நவீன சந்தை, சாவகச்சேரி.

இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு பிரத்தியேக காட்சியறை

இல. 16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். ☎: 222 2552

(C/30720)



இன்ப ஒளிக்கீற்றின் வெளிச்சமான தீபாவளி நன்னாளில் எமது இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்

செல்வி நகை அகம்

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)



(C/30721)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் போக்கும் ஒளி

தீவினை அகற்றும் நன்மை

பொய்மை கலவாத உண்மை





இராவணனைக் கொன்று ஸ்ரீ இராமன் மீண்டது போல் நரகாசுரனை அழித்து கிருஷ்ண பராமாத்மா காத்தது போல் தீமைகளை களைந்து நல்லவற்றை நாடி வளமுடன் வாழ உறுதி பூணுவோம்.
**இத் தீபாவளி நன்நாளை அர்த்தமுள்ளதாக்குவோம்.**

NSB
தேசிய சேமிப்பு வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2003

## தீபாவளி திருநாளின் கதை

உலகெங்கும் பரந்துவாழும் இந்துப்பெருமக்கள் இன்று இத்தீபாவளியை இன்பமுடன் கொண்டாடுகின்றார்கள். அவரவர் தத்தமது வசதிக்கேற்ப தத்தமது உறவினருடனும், நண்பர்களுடனும் சுற்றத்தாருடனும் பட்டாடைகளுடுத்து, பட்சணங்களுண்டு, பக்கத்திலிருக்கும் கோவில்களுக்குப் போய் பகவானைப் பூசித்து கொண்டாடி வருகிறார்கள். புதுமணத் தம்பதிகளுக்கு இன்று தலைத்தீபாவளியென்று சிறப்புத்தினமாகும். மேலே கூறியவை தமிழ் இந்துக்களின் பாரம்பரிய கலாசார கொண்டாட்டமாகும். இந்தியாவில் பல்வேறு மொழியினரும் பல்வேறுவிதமாக கொண்டாடி மகிழ்கின்றனர். இத்தீபாவளி தினத்தை மக்கள் ஏன் கொண்டாடி வருகின்றனர் என்பதற்கு புராணகதை ஒன்றுள்ளது.

காத்தற் கடவுளான விஷ்ணு பகவானானவர், வராக அவதாரமெடுத்த போது கோரப்பற்களுடன் கூடிய வராகமாகிய உக்கிர மூர்த்தியாக காட்சியளித்தார். பூமாதேவியானவர் வராகர் மேல் மோகங்கொண்டு அவரது உக்கிரத்தை தணிப்பதற்காக வராகருடன சேர்ந்தார். அவர்களின் சேர்க்கையின் விளைவால் நரகன் என்பவன் தோன்றினான்.

அவன் அரக்க அம்சமாகத் தோன்றினான். பிறந்தவுடனேயே வளர்ந்து தாயாராகிய பூமாதேவியைப் பணிந்து நின்றான். பூமாதேவியும் அவனை ஆசீர்வதித்து பிராக்ஜோதஷபுரம் என்னும் நகரை தலைநகராகக்கொண்ட பூவுலகை ஆளும்படி அருள்புரிந்தார். பின் பூமாதேவியானவர் பகவானை பலவாறு துதித்து "நரகன் அரக்க அம்சமாகவிருப்பதால் அவனை ஒருபோதும் கொல்லக்கூடாது" என்று வரம் வேண்டினார். பகவானும் அவ்வாறே அருள் புரிந்து "பூவுலகில் அவனது பாவச் செயல்கள், கொடுமைகள் அதிகரித்தால் அவனை நீயே அழிப்பாய்" என்றும் வரமளித்தார்.

அன்று முதல், அரக்க மன்னனான நரகன் பிராக்ஜோதிஷபுரத்தை தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். மூவுலகங்களையும் அவன் அடக்கி ஆண்டான். தேவர்களை சிறை வைத்தான். கன்னியர்கள் பலரைக் கவர்ந்தான். இந்திரனின கவசகுண்டலங்களையும் கவர்ந்தான். சுவர்க்கபுரியை விட்டு இந்திரனைத் துரத்தினான்.

இரவில் விளக்குகள் எதுவும் எரியவிடாமல், மக்களைத் தடுத்தான். இனிப்புணவுகள் உண்பதை, கொண்டாட்டங்கள், விழாக்கள் செய்யவதைத் தடுத்தான். மக்கள் எவரும் புத்தாடைகள் அணியக்கூடாது எனத்தடுத்தான். எதிர்த்தவர்களைக் கொன்றொழித்தான்.

இவனது கொடுமைகளை தேவர்கள்,மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிடம் முறையிட்டனர். பூபாரம் தீர்க்க வந்த கிருஷ்ணரும் சத்யபாமாவுடன் கருடன் மீதேறிச் சென்று பிராக்ஜோதிஷபுரத்தையடைந்து நரகனைப்போருக்கழைத்தார். பாஞ்சசன்யத்தை கையில் எடுத்து பகவான் ஊதினார்.

சினமடைந்த நரகன் தனது படைகள் அனைத்தையும் திரட்டி வந்து கிருஷ்ணனுடன் போர்புரிந்தான். முதலில் மந்திரி மாண்டான். அதன் பின் சேனைத்தளபதிகள், அவனது பிள்ளைகள் பலரும் படிப்படியாக போரில் மாண்டனர்.

இறுதியில் பரமாத்மாவுக்கும் நரகனுக்கும் பெரும் போர்மூண்டது. பரமாத்மாவும் அனேகமாயிரம் போர்வீரர்களை கொன்றொழித்தார். ஆயினும் நரகனைக்கொன்றொழிக்க அவரால் இயலவில்லை. இதையுணர்ந்த பகவான்,சிறிது களைப்புற்று இளைப்பாறுபவர் போல நின்ற வண்ணம், சத்யபாமாவிடம் "இவனது அக்கிரமங்களை அதிகரித்துள்ளபடியால் இவனே நீயே அழித்து விடுவாயாகுக!" என்று கட்டளையிட்டார். அம்பாளும் உடனடியாகவே வில்லை எடுத்து வளைத்து ஒரே ஒரு அம்பை எய்து நரகனை வீழ்த்தினார்.

நெஞ்சிலே அம்பு பாய்ந்த நரகன் அலறியபடி வீழ்ந்தான்.தேவர்களும் மானிடர்களும் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். நரகன் மரிக்கும் போது பரமாத்மாவின் அருள் ஜோதியைக் கண்டு நல்லறிவு பெற்றவனாக "பிரபு நான் பல பாவங்கள் செய்து விட்டேன்.எனது தவறுக்கு வருந்துகிறேன். என்னை மன்னித்து நான் இறந்த இன்றைய தினத்தை பூமியிலுள்ள மாந்தர் புத்தாடைகள் அணிந்து பட்சணங்கள் உண்டு, இறைவனைப் போற்றி மகிழ்வுடன் வருடந்தோறும் கொண்டாட வேண்டும்" என்று வரம் வேண்டினான்.

பகவானும் "அவ்வாறே உனக்கு வரமளித்தேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்,அன்று முதல் தான் தீபாவளியானது மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. பகவான் அருளுடன் நரகனின் உயிர் பிரிந்தது. நரகன் இறந்த பின்பு பூமாதேவியானவர் நரகனின் இளையமகனான பகதத்தனை அழைத்து வந்து, பலவாறு துதித்து வணங்கி "பிரபு இவன் பகதத்தன் நரகனின் இளையமகன். இவன் ஓர் அப்பாவி . இவனை இந்நாட்டுக்கு அதிபதியாக்கிஇவர் சிரசுமேல் கை வைத்து ஆசிர்வதிப்பீராகுக!" என்று வேண்டவும், அவ்வாறே பகவானும் அருள்கூர்ந்தார்.

அதன்பின் பூமாதேவியுடன் நரகனின் அரண்மனைக்குச் சென்று சிறையிலுள்ள அனைவரையும் விடுவித்து இந்திரனின் கவச குண்டலங்களையும் மீட்டெடுத்து இந்திரனிடம் ஒப்படைத்த பின் துவாரகையையடைந்தார்.

எனவே இப்பேர்ப்பட்ட கொடியவன் மறைந்த தினமாகிய தீபாவளி நாளை பயபக்தியுடன் நீராடி புத்தாடைகள் அணிந்து இறைவனைத் துதித்து குடும்பத்தினருடனும் சுற்றத்தார், உறவினர், அயலவருடனும் மகிழ்ச்சிகரமாக கொண்டாடுவோமாக! தீபாவளி வாழ்த்துக்கள்!

**பிரம்ம ஸ்ரீ.ச.க.சுதர்சனக்குருக்கள்**
**ஸ்ரீ வல்லிபுரக்கோவில**

ஆறுதல் தந்துள்ள அமைதிப் பேச்சு பூரண வெற்றி பெற்று தேறுதல் தந்திட வாழ்த்தி....
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம் இதயங் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள்
★பட்டுச் சாறி வகைகள்
★பட்டு வேட்டிகள்
★பட்டுச் சால்வைகள்

அழகுக்கு அழகூட்டும் ஆடைவகைகள்
★பஞ்சாபி ★சோளிகிற்
★ஸ்கேட் & பிளவ்ஸ்
★சேட்டிங் சூட்டிங்

(C/30871)

அனைத்து வகையான ஆடைகளின் மகத்தான தெரிவுகளுக்கு

மகா சில்க்ஸ்
32, 40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்

பியூட்டி சில்க்ஸ்
69, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

டாட் என்ரப் பிறைஸ்



(C/30856)

DART ENTERPRISE

Wholesale & Retail Dealers in Watches, Wallclocks, Electronic, Electrical, Gift Items & Fancy Goods.

No. 11, 12, New Market Inside, Jaffna
Tel: 222-3098

தீபாவளி வாழ்த்துக்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

துஷா ஒப்ரிசன்ஸ்
கண்ணுக்குக் கண்ணாய் உங்களுக்குக் கைகொடுக்கக் காத்திருக்கிறது.



(C/30867)

துஷா ஒப்ரிசன்ஸ்
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்.

இன்பத் தீபாவளி நாளில் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்!

RAVI & RAJ SILKS

அழகிய தரமான பட்டுப் புடைவைகள், சேட், சூட், ரீ சேட், றெடிமேட் ஆடைவகைகள் அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

ரவி & ராஜ் சில்க்ஸ்

